# இனி எல்லாம் சுபமே!

1

**ம**தியழகி... கந்தசஷ்டி கவசத்தை வாயில் முணுமுணுத்துக் கொண்டே... ஆறு மணிக்கே அடுப்படியில் இருந்தாள்.

அவளுக்குத் தெரிந்த ஒன்றே ஒன்று கந்தசஷ்டி கவசம்தான். இன்று அவளை அந்த முருகன்தான் காப்பாற்ற வேண்டும்.

அடுப்பில் பாலை வைத்து விட்டு... நெற்றியில் குங்குமம் வைத்துக் கொண்டு வந்தாள்.

பால் நுரை ததும்ப... காபி அவள் அத்தை சாரதாமணிக்கு வேண்டும்.



அவள் எழுந்திருக்கும் நேரம் அனுசரித்துத்தான் மதியழகி அடுப்பில் பாலையே வைப்பாள். தினசரி ஆறு மணிக்கே வேலையை ஆரம்பித்தால்தான்... அத்தையிடம் பேச்சு வாங்காமல்... தான் போவதற்குள் வேலையை முடிக்க வேண்டும். நாத்தனார் வனிதா எழுந்தால் கூடமாட ஒத்தாசை செய்வாள்.

மதியழகி, அவளது கணவன், நாத்தனார், மாமியார் என அளவான குடும்பம் அது.

அவர்... சீக்கிரமே ஆபீஸ் போக வேண்டியிருக்கும் என்பதால்... டைம் டேபிள் போட்ட மாதிரி அவளுடைய வேலைகள் ஆறு மணிக்கே ஆரம்பமாகி விடும்.

அவரைப் பற்றி நினைத்தவுடன்... கண்களில் கண்ணீர் தளும்பியது.

அத்தையும் வனிதாவும் விடிந்தது தெரியாமல் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். எழுந்ததும்... இவர்களுக்கு விடிவே கிடையாது என்று தெரிந்தால்...

நெஞ்சு அடைத்தது. சொல்லாமல் அப்படியே விடவும் முடியாது. என்ன சொல்வாள்... அத்தையிடம்!

தானாகத் தெரிய வரட்டும். குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து... காய்கறிகளை எடுத்தாள். ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்தாள். அதனால் மனத்தின் புழுக்கம் மறையுமா என்ன?

என்ன காய் செய்வது? யாருக்காகச் செய்வது? விஷயம் தெரிந்தால்... யாருக்கு இங்கே சாப்பாடு வேண்டியிருக்கும்?

புசிக்க ஆளிருக்காது எனும்போது விருந்து என்ன வேண்டிக் கிடக்கிறது?

கடவுளே! அத்தை ஏன் இன்று இன்னமும் எழுந்திருக்க வில்லை?

எழுப்பிக் கேட்போமா? அவளுக்குத் தெரிந்து ஏதாவது...? வேண்டுமென்றே பழி போடுவது போலல்லவா புலம்புவார்கள்.

சற்றே துணிவை வரவழைத்துக் கொண்டு மெல்லச் சாரதாமணியை எழுப்பினாள்.

"அத்தை! அவரை எங்கேயும் காணோமே! உங்ககிட்ட சொல்லிட்டு எங்கேயாவது...?"

"என்னடி இவ? மனுஷியைத் தூங்க விடாம...! அவன் எங்கே போவான்? வாக்கிங் போற நேரம்தானே... வாக்கிங் போயிருப்பான். நீ போய்ச் சமையலைக் கவனி! அதைக் கருக விட்டுடாதே... !" - சொல்லிவிட்டுத் திரும்பப் படுக்கவும்... ஜன்னலின் வழியே சூரியன் தன் கதிர்களை அவர் முகத்தில் செலுத்தி எழுப்பினான்.

விடிந்து வெகு நேரமாகி விட்டதோ? தூக்கம் கலையாமல் எழுந்து அமர்ந்தாள் சாரதாமணி.

'என்ன இந்தப் பெண் இப்போது எழுப்பி எதையோ சொல்லிவிட்டுப் போனாளே...! முத்தையனைக் காணோமா?'

"வனிதா! தூங்கறதைப் பாரு! எழுந்திரு. எங்கேடி உன் அண்ணன்?"

"அண்ணனா! அண்ணியைக் கேளும்மா... என்னைப் போய்க் கேட்கிறே?"



"ஏன்டி... மதிதான்டி என்கிட்டயே கேட்கிறா... மதி குளிக்கப் போயிருக்கும்போது முத்தையன் உன்கிட்ட ஏதாவது சொல்லிட்டுப் போனானா?"

சட்டெனத் தூக்கம் கலைந்து எழுந்து உட்கார்ந்தாள் வனிதா.

"என்னம்மா... குண்டைத் தூக்கிப் போடறே! அண்ணனைக் காணோமா? வாக்கிங் போயிருக்கும். வந்துடும்மா...!"

"மணியைப் பார்த்தியா? ஆறு முப்பது. வாக்கிங் போயிருந்தாலும் இந்நேரம் வந்திருக்கணுமேடி..."

"என்ன அண்ணி, உங்களுக்குத் தெரியாதா?"

அழுகையுடன் 'இல்லை' எனத் தலையாட்டினாள் மதி.

"உங்ககிட்ட கூட சொல்லாம அண்ணன் எங்கே போயிருப்பார்? நீங்க எப்போ தேட ஆரம்பிச்சீங்க?"

"நான் குளிச்சிட்டு வந்து பார்த்தப்பவே அவரைக் காணோம். காபி கூட குடிக்காம எங்கே போயிருப் பாருன்னு... எல்லா இடங்களிலும் பார்த்துட்டு அத்தையை எழுப்பினேன்."

பரபரப்புடன் யாருக்கும் என்ன செய்வதென... என்ன சொல்வதென விளங்கவில்லை.

மதியழகிக்கும் முத்தையனுக்கும் திருமணம் முடிந்து ஆறே மாதம்தான் ஆகிறது. மதி... அத்தை 'நில்' என்றால் நிற்பாள். 'உட்கார்' என்றால் உட்கார்வாள். அதனால்

பிரச்சனையின்றி நிம்மதியாகப் போய்க் கொண்டிருந்தது குடும்பம்.

முத்தையனின் அகலக் கால் வைக்கும் முடிவால்... சமீப காலமாக நிம்மதியை இழந்து தவிக்க ஆரம்பித்திருக்கிறது குடும்பம்... இப்போது இப்படி ஒரு இடி!

சட்டெனப் பொறி தட்டினாற் போல் நிமிர்ந்தாள் சாரதாமணி.

"ஐயோ வனிதா! காலை பத்து மணிக்கெல்லாம் அந்தக் கடன்காரன் சேட் வந்து நிற்பானேடி... இவனை எங்கேடி காணோம்?"

மதி பதில் ஒன்றும் பேசவில்லை. என்ன பேசுவாள்? யாருக்காகப் பரிந்து பேசுவாள்?

அத்தையின் கோபத்தைக் கிளற விரும்பவில்லை அவள்.

உண்மையிலேயே அந்த சேட் கடன்காரன்தான்... இவர்களுக்குக் கடன் கொடுத்தவன்.

கடனை வட்டியுடன் எண்ணி... இன்று காலை பத்து மணிக்கு செட்டில் செய்ய வேண்டும். இல்லையென்றால் மரியாதை கெட்டுவிடும் என்று நேற்று இரவுதான் முத்தையனை எச்சரித்து விட்டுப் போயிருந்தான்.

"இரும்மா! கொஞ்சம் புலம்பாம யோசிக்க விடு. அண்ணன் எங்கே போனாலும் செல்ஃபோன் இல்லாமப் போகாது. வாக்கிங் போயிட்டு அப்படியே யார்கிட்டயாவது பேசிக்கிட்டிருக்கும். அவ்வளவுதான்! செல்ஃபோனிற்குப் போன் பண்றேன்.... இரு...!"



மதி திடுக்கிட்டாள். இது எப்படித் தனக்கு இதுவரை தோணாமல் போனது?

"ஒன்பது... நான்கு... நான்கு... நான்கு..."

'கடவுளே!' - மதி.

"ஐந்து... நான்கு..."

'அவர் எடுப்பாரா?'

"ஏழு... இரண்டு..."

'அவர் எடுத்து விட்டால்?'

"ஒன்று... எட்டு..."

சில நிமிடங்கள் மயான அமைதி. ஒருவருக்கொருவர் விட்டுக் கொள்ளும் மூச்சுக்கூடத் தெளிவாகக் கேட்டது.

சட்டென... உள்ளே முத்தையனின் படுக்கையறையிலிருந்து செல்ஃபோன் வீறிடும் சத்தம் ஹாலுக்குக் கேட்டது.

'முத்தையன் செல்ஃபோன் எடுத்துப் போகவில்லையா?'

2

"அம்மா! அண்ணன் செல்ஃபோன் எடுத்துட்டுப் போகலையா?"

"அப்போ... ஒரு முடிவோடுதான்... மதி! இங்கே வா...."

பக்கத்தில் வந்தாள்.

"நீ எதையாவது அவன் மனசு சங்கடப்படற மாதிரி சொன்னியா?"

"ஐயையோ... அதெல்லாம் இல்லை அத்தை! அவர் இப்படிப் பண்ணுவாருன்னு நான் நினைக்கவே இல்லை. அத்தை..."

கண்ணீருடன் சொன்னாள் மதி.

"நீ எதுவும் சொல்லியிருக்க மாட்டே! உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா என்ன? 'கடன்தானே... நாம அடைச்சிடலாம். கவலைப்படாதீங்க!' அப்படின்னு தைரியம் சொல்லியிருக்கணும்... நீ எங்கே சொல்லியிருக்கப் போறே? இப்போ அழுது என்ன பிரயோசனம்? என் பிள்ளை எங்கே போனானோ... தெரியலையே?"

"இரும்மா... நீ கொஞ்சம் அண்ணியை வையாம இரு. அண்ணனோட ஃபிரண்ட்ஸ்க்கு யாருக்காவது ஃபோன் பண்ணி ஏதாவது அண்ணன் சொல்லியிருக்கான்னு கேட்போம்."

நிமிர்ந்தாள் மதி.

'ஓ! இப்படியும் ஒரு வழியிருக்கோ? இது நமக்கு ஏன் முன்னமேயே தோணாமல் போயிற்று.'

"அவனோட சினேகிதங்க ஃபோன் நம்பரெல்லாம் உனக்கு எப்படிடி தெரியும்?"

"அம்மா! அதுதான் அண்ணனோட செல் இங்கேயே இருக்குல்ல. ஃபோன் நம்பர் அதுல இருக்கும்ல..."

சொன்ன வனிதா உள்ளே போய் முத்தையனின் செல்ஃபோனை எடுத்து வந்தாள்.



"வனிதா! தா என்கிட்ட. நான் பேசறேன்... நான் பேசினா அவங்க யாருக்கும் எந்தச் சந்தேகமும் வராது."

"சரி அண்ணி!"

வாங்கிக் கொண்டு வராண்டாவிற்குப் போனாள்.

ஒருவேளை முத்தையன் அவர்களிடம் ஏதேனும் சொல்லிவிட்டுச் சென்றிருந்தால்... வயசுப் பெண் வனிதா!

இவ்விஷயத்தில் வனிதாவை இறங்க விடக் கூடாது. எண்களைத் தேடினாள்.

"பத்து நிமிஷமாச்சே... அண்ணி பேசினாங்களா, தெரியலையே? அண்ணி... அண்ணி!"

'இரு வனிதா...' – சைகை காட்டி விட்டு...

"சரிங்க... நான் அப்புறமா வேணும்னா உங்களைக் கூப்பிடறேன்... தாங்க்ஸ்ங்க!"

"இது வரைக்கும் உன் அண்ணனோட நண்பர்கள் ஐந்து பேர் வரைக்கும் ஃபோன் செய்து கேட்டுட்டேன். யாருக்கும் ஏதும் தெரியலை... வனிதா!"

"அம்மா...!" – உள்ளே போக எத்தனித்த நாத்தனாரைத் தடுத்துக் கேட்டாள் மதியழகி.

"வனிதா! அத்தை சொல்ற மாதிரி அவர் ஏதும் தப்பான முடிவு எடுத்திருக்க மாட்டாரில்ல...?"

"என்ன அண்ணி... அம்மா கிடக்கிறாங்க. எந்த நேரத்தில... எது பேசறோம்னு தெரியாம... என்னை விட உங்களுக்கு அண்ணனை நல்லாத் தெரியாதா! அண்ணன் அப்படியெல்லாம் செய்ய மாட்டாரு."

"ஆனா பாழாப்போன கடன் பிரச்சினை அவரைக் கோழையாக்கிடுச்சே... இன்னிக்குக் காலை பத்து மணிக்கு வருவேன், பணம் ரெடியாக இருக்கணும்னு கெடு கொடுத்துட்டு இல்ல போயிருக்கான் அந்த சேட்..."

"இருங்க. கவலைப் படாதீங்க... அண்ணன் வந்துடுவாரு..."

அண்ணிக்காகச் சொன்னாலும் அவள் உள் மனதில் அதற்கான நம்பிக்கை சிறிதும் இல்லை.

'இவ்வளவு காலையில் எங்கே போயிருப்பார்... அண்ணன்?'

## 3

**நே**ரம் ஆக ஆகப் பதட்டம் கவலையாக மாறியது. சாரதாமணிக்கோ நாக்கில் தண்ணீர் கூடப் படவில்லை. செய்வதறியாது மூலையில் சாய்ந்து விட்டாள்.

வனிதாதான் காபி கலந்து கொண்டு வந்து அன்னையை எழுப்பிக் கட்டாயப்படுத்திக் குடிக்க வைத்தாள்.

மதியையும் அதே போல் குடிக்க வைத்தாள்.

எப்படி இருந்த குடும்பம் இது...! முத்தையனின் அப்பா இருந்தவரை... கடன் என்ற வார்த்தையையே அறியாது வாழ்ந்த குடும்பம்.

முத்தையன் அகலக் கால் வைக்கப் போய்... தலைக்கு மேல் கடன்... இதே சேட்டிற்கு இதற்கு முன்...



மூன்று நான்கு முறை வாய்தா சொல்லியாகி விட்டது. இன்று கழுத்து மேல் நின்று வாங்காமல் நகர மாட்டான்.

பணம் இருந்து கொண்டே... இல்லையென்றா இவர் கூறுகிறார் என்று நினைத்தாள் மதி!

எல்லாம் இவர் எதிர்பார்த்தபடி நடந்திருந்தால்... இவர் கணக்குத் தப்பாகாது போயிருந்தால்... மற்றவர்களுக்குக் கடன் கொடுக்கும் அளவில் அல்லவா இவர்களிடம் பணம் புரண்டு கொண்டிருக்கும்.

அவர்கள் மூவருக்குமே... ஒருவேளை கோழையாய்த் தங்களை 'அம்போ...' என்று விட்டு விட்டு முத்தையன் ஓடி விட்டானோ என்ற ஐயமும்...

அவன் அவ்வாறு செய்யக் கூடியவனில்லை. இதோ வந்து விடப் போகிறான் என்ற நம்பிக்கையும் ஒருசேர ஏற்பட்டுக் குழப்பியது.

அடுத்து... என்ன செய்வது?

"அண்ணி! அண்ணனின் நண்பர்களிடம் கேட்டாயிற்று. இப்போ வேணா... நம்ம சொந்தக்காரங்ககிட்ட கேட்டுப் பார்க்கலாமா?"

"என்ன வனிதா! இவ்வளவு காலையில் அதுவும் நம்மகிட்ட கூட சொல்லாமல்... உன் அண்ணன் அப்படி எந்தச் சொந்தக்காரங்க வீட்டுக்குப் போயிருப்பாருன்னு நினைக்கிற?"

"இல்லை அண்ணி! பணம் எப்படியும் ஏற்பாடு பண்ணணுமே... யார்கிட்டயாவது பணம் கேட்டுப் பார்க்கலாமே... என்று அண்ணன் போயிருக்கலாமில்லையா?

பணம் கிடைத்ததும் நம்மகிட்ட சொல்லலாம்னு நினைச்சிருக்கலாம்."

"எனக்கென்னவோ நம்பிக்கையில்லை வனிதா... அப்படிச் சொந்தக்காரங்க வீட்டுக்குப் போகிறவர் என்கிட்டயாவது சொல்லிட்டுத்தான் போவார். சொல்லாம கொள்ளாம நம்மைத் தவிக்க விட்டுட்டுப் போகணும்னு போயிருக்கிறவர் சொந்தக்காரங்க வீட்டுக்கா போவார்... நாம அங்கே ஃபோன் பண்ணுவோம்னு தெரியாதா?"

"இல்லை அண்ணி! எனக்கு நம்பிக்கை இருக்கு."

உடனே தன் அத்தை, பெரியம்மா, மாமா... என்று கிட்டத்தட்ட பத்து ஃபோன் செய்து விட்டு உதட்டைப் பிதுக்கினாள் வனிதா.

"அதுதான்... நீ ஆரம்பிக்கும் போதே அச்சானியமா ஆரம்பிச்சாளே உன் அண்ணி... அப்புறம் எங்கே இருந்து நல்ல செய்தி கிடைக்கப் போகிறது?"

நொறுங்கிப் போனாள் மதி.

அவர் இப்படிக் காணாமல் போனதில் தனக்கு மட்டும் வேதனை இல்லையா... என்ன?

அவர் அங்கே இருந்தால்... இருக்கிறார் என்று கூறப் போகிறார்கள். இல்லையென்றால்... இவள் ஆரம்பிக்கும் போதே அபசகுனமாகக் கூறினாள் என்று... எப்படி இப்படித் தன் மேல் பழி போட முடிகிறது!

அவர் அங்கெல்லாம் இருந்தால் அல்லவா... நல்ல பதில் வருவதற்கு!



அடுத்து... சாரதாமணி அரற்ற ஆரம்பித்து விட்டாள்.

"எப்பேர்ப்பட்ட பிள்ளை முத்தையன்! என்ன கஷ்டம் வந்தாலும் கலங்காம இருப்பானே... இப்போ இப்படி பண்ணிட்டானே... என்னைப் பற்றிக் கூட நினைக்காம இப்படி ஒரு காரியம் பண்ணிட்டானே...!"

"அம்மா... அடுத்து இப்போ என்ன பண்றது... போலீஸ்ல...?" - வனிதா.

பதறி வந்தது குரல் மதியிடமிருந்து. "ஐயையோ... அதெல்லாம் வேணாம் வனிதா! இன்னிக்குப் பூரா பார்ப்போம். அவர் எப்படியும் வந்துடுவார். நீ வேற கல்யாணத்திற்கு நிக்கிறே. போலீஸ் அது... இதுன்னா... உன் வாழ்க்கையையும் அது பாதிக்காதா? பார்ப்போம்... வனிதா!"

"அப்பாடி! இப்பதான் உன் அண்ணி உனக்கு அண்ணியா பொறுப்பான ஒரு வார்த்தை சொல்லியிருக்கா. மதி சொல்ற மாதிரி... எடுத்தேன் கவிழ்த்தேன்னு போலீஸுக்குப் போக முடியுமாடி... எனக்கு இன்னமும் ஒரு நம்பிக்கை இருக்கு. உன் அண்ணன் வருவான்..."

"அண்ணன் வருதோ இல்லையோ... அந்த சேட் வந்துடுவான்ம்மா... என்ன பதில் சொல்றது?"

அம்மாவிடம் சொல்லி அவர் மனதை வருத்தப்படச் செய்ய வேண்டாம் என்று நினைத்தாலும் வனிதாவிற்கு நம்பிக்கை இல்லை.

அண்ணன் தங்களை அம்போவென விட்டு விட்டு ஓடி விட்டான். மதி அண்ணியைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

இவர்கள் பயப்பட்ட மாதிரியே... பத்து மணி ஆனதோ இல்லையோ... சேட் வந்து விட்டான்.

"என்னம்மா! நடிக்கிறே? பையனை உள்ளே வைச்சுக்கிட்டே இல்லைன்னு சொல்றியா?"

"இல்லை... சேட்! சாமி சத்தியமா... பையனைக் காலையிலிருந்தே காணோம்...! நாங்களே விசாரிக்காத இடமில்லை..."

"உன் சத்தியமெல்லாம் யாருக்கும்மா வேணும்? உன் பையன் இல்லாட்டிப் போனா... எனக்கென்ன! என் பணத்துக்கு என்ன சொல்லப் போறே? நீ சொல்லு..."

"இன்னும் ஒரே ஒரு வாரம் பொறுத்துக்குங்க. சேட். நான் எப்படியாவது..."

சேட் கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தான்.

"பையனைக் காணோம்னு சொல்லுது. இன்னும் ஒரு வாரத்தில மட்டும் எப்படிம்மா பணம் ஏற்பாடு பண்ணுவ?"

"நானே என் புள்ளையைக் காணோம்னு பதை பதைத்துப் போயிருக்கேன். இப்படிப்பட்ட நிலைமையிலும் நீங்க பணமே குறியாப் பேசறீங்களே...

"சேட்! உங்க பணத்தை என் தலையை அடமானம் வைத்தாவது கொடுத்துடறேன். இப்போ தயவு செய்து பிரச்சினை பண்ணாதீங்க... சேட்!"

சேட் ஒன்றும் சொல்லாமல் முணுமுணுத்தபடி நகர்ந்தான்.



அனைவரும் உள்ளே வந்தனர். ஒருவரோடு ஒருவர் பேசும் மனநிலையில் இல்லை. மயான அமைதியில் இருந்தது வீடு.

கணவர் இப்படி அம்போன்னு விட்டுட்டு ஓடிட்டாரேன்னு கவலை, வருத்தம் ஒருபுறம் மனதைத் தாக்கினாலும்... அவள் மனமோ வேறு ஒன்றைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தது.

அவர் அங்கே காத்துக் கொண்டிருப்பாரே! அவரைச் சந்திக்க வேண்டுமே...!

என்ன சொல்லி விட்டு வீட்டை விட்டு நகருவது? ஏற்கெனவே வீடு இருக்கும் நிலையில்... 'நீ இன்று ஆபீஸ் போக வேண்டாம்...' என்று அத்தை ஏற்கெனவே சொல்லி விட்டார்.

அத்தைக்குத் தெரிந்தால் அவ்வளவுதான்...

அத்தைக்கும் வனிதாவிற்கும் தெரியாமல்... எப்படி அவரைப் போய்ப் பார்ப்பது?

மதி யோசனையில் விழுந்தாள்.

## 4

மதி யோசித்துக் கொண்டிருக்கும் போதே... வனிதா அண்ணனின் அறையிலிருந்து குரல் கொடுத்தவாறே... வேகமாக அன்னையை நெருங்கினாள்.

"அம்மா! இதோ பாரும்மா! அண்ணன் லெட்டர் எழுதி வெச்சுட்டுப் போயிருக்கும்மா. அண்ணன்

நீ சொன்ன மாதிரி நம்மை யெல்லாம் ஏமாத்திட்டுப் போயிடுச்சும்மா..."

அவர் லெட்டர் எழுதி வைத்து விட்டு... எனக்கும் தெரிய வில்லை. இது புதுச் செய்தியாக உள்ளதே...!

மதி ஓடிப் போய் அத்தையின் புறம் நின்று.. எட்டி லெட்டரைப் பார்த்தாள்.

முத்தையனின் சாய்வான எழுத்துக்கள் அந்தத் தாளில் வரி வரியாய் ஓடியிருந்தன.

'அம்மா, மதி, வனிதா...

அனைவரும் தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். தங்களை இப்படி அனாதரவாக விட்டு விட்டு ஓட... எனக்குச் சிறிதும் மனமில்லை.

வேறு வழியே இல்லாது... கடன் சுமை கழுத்தை நெரிக்க... இப்படி ஒரு முடிவு எடுக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறேன்.

இந்த நிலை தற்காலிகமானதுதான்... அம்மா! நான் எதிர்பார்த்துள்ள இடத்தில் வெகு விரைவில் பணம் கிடைத்து விடும். பின்... கடன் அடைக்கத் தேவையான பணத்துடன் நானே விரைவில் வந்து விடுவேன். அதுவரை உயிரோடாவது இருக்க வேண்டுமில்லையா! எனவேதான் இப்படி முடிவெடுக்கத் தள்ளப்பட்டிருக்கிறேன்.

தயவு செய்து என்னைப் புரிந்து கொள்ளுங்கள். அவசரப்பட்டு போலீஸ் வரை போக வேண்டாம்... வனிதாவின் எதிர்காலம் இதில் அடங்கியுள்ளது.



நேரம் காலம் வரும்போது நானே வருகிறேன். அதுவரை பாதுகாப்பான இடத்தில்தான் இருக்கிறேன். என்னைத் தேட வேண்டாம்.

அம்மா! நீ என்னைத் தயவு செய்து மன்னிப் பாயாம்மா...?

வேறு வழியின்றி...

வீட்டை விட்டுப் போக முடிவெடுக்கும்,
முத்தையன்.'

காலையில் இருந்த கோபம் போய்... சாரதாமணியின் குரலில் வருத்தம் தொனித்தது.

"சீ போடி! போலீஸுக்குப் போகக் கூடாதாம்... உன் அண்ணன் வீட்டை விட்டுப் போயிட்டான்னா... சரி, அப்படியே போகட்டும்னு விட்டுடணுமாம்... உன் வாழ்க்கை... எதிர்காலம்...?

"இப்ப மட்டும் என்ன... அண்ணன்காரன் இப்படிக் கடன்காரங்களுக்குப் பயந்து வீட்டை விட்டே ஓடிட்டான்னு தெரிஞ்சா... நீ நான்னு உன்னைப் போட்டி போட்டுட்டு வந்து பெண் கேட்பாங்களா... இது மட்டும் அவமானமில்லையாமா அவனுக்கு...?"

வேதனையில் வார்த்தைகள் வெடித்தன.

இதுவரை காலையிலிருந்து ஒன்றுமே பேசாமல் இறுகிப் போயிருந்தவள்... பேசட்டும்!

ஒரு விதத்தில் மகன் எழுதி வைத்து விட்டுப் போயிருந்த கடிதத்தைக் கண்ட சாரதாமணிக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது எனலாம்.

போன நிமிடம் வரை... 'பாவிப் பையன்... கடன்காரன் வந்து விடுவானே...' என்று வீட்டை விட்டு ஓடிட்டானே... எந்த இரயிலில் தலை கொடுத்தானோ... சாகத் துணிந்து வீட்டை விட்டுப் போனானோ...?

எந்த நிமிஷம் போலீஸ் சாவுச் செய்தியோடு வீட்டுப் படியேறுமோ என்று சாரதாமணிக்கு உள்ளூரக் கலக்கம் இருந்தது.

இப்போதோ... ஓரளவு நிம்மதி! அவன் எங்கோ... ஒரு மூலையில் உயிருடன் இருக்கிறான். என் பிள்ளை எனக்குக் கொள்ளி போட உயிருடன் இருக்கிறான்!

ரொம்பவும் இல்லையென்றாலும்... ஓரளவு சகஜ நிலைமைக்குத் திரும்பியது வீடு. இனி மேலும் ஒவ்வொரு வராய் ஃபோன் செய்து... யார் வீட்டிற்காவது அண்ணன் வந்திருக்கிறாரா என்று விசாரிக்க வேண்டியதில்லை.

தலைமறைவாக இருக்கும் முத்தையன் எப்படியும் உறவுக்காரர்கள் வீட்டுக்குப் போயிருக்க மாட்டான்.

அழகாக லெட்டர் எழுதி வைத்துப் போயிருப்பவன்... வருவான் என்று வாசலைப் பார்த்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

ஒவ்வொருவரின் மனதில் ஓராயிரம் கேள்விகளும் யோசனைகளும் உழன்று கொண்டிருந்தபடியால் யாருக்கும் யாருடனும் பேசத் தோன்றவில்லை.

மதி அழுக்குத் துணிகளை அள்ளிக் கொண்டு வாஷிங் மெஷின் நோக்கிப் போனாள். வனிதா சமையலறைக்குப்



போனாள். சாரதாமணி மட்டும் இடிந்த உள்ளத்தோடு சோபாவில் சாய்ந்தாள்.

மதி உள்ளத்தில் மட்டும் அந்தக் கேள்வி!

இன்று அவரை எப்படியாவது பார்க்க வேண்டும்... முடியுமா?

## 5

அன்று முழுவதும் மதியால் வீட்டை விட்டு நகர முடியவில்லை. அன்று இரவு முழுவதும் தூக்கமும் வர மறுத்தது.

மறுநாள்... இயந்திர கதியில் சமையலை முடித்தாள் மதி! நல்ல வேளையாக இவர்கள் வீட்டில் வேலைக்கு வேலைக்காரி யாரும் இல்லையென்பதால்... குடும்ப விவகாரம் இதுவரை வெளியே போகவில்லை.

ஆனால் எத்தனை நாளைக்குத்தான் இப்படி மூடி மறைக்க முடியும்? இப்பவே அன்று சேட் வந்து குரலை உயர்த்திக் கத்தி விட்டுப் போகும்போது எதிர் வீட்டு ஜன்னலும் பக்கத்து வீட்டு ஜன்னலும்... என்ன ஏது என்று ஆவலாகத் திறந்து கொண்டதை மதி பார்த்திருந்தாள்.

வனிதா கூட நேற்றுக் கேட்டாள்.

"என்ன அண்ணி! எதிர்பார்த்த இடத்தில் பணம் சீக்கிரம் கிடைச்சிடும்னு அண்ணன் லெட்டர் எழுதி வெச்சுட்டுப் போயிருக்கு. அப்படி தர்ற அளவுக்குச் சிநேகிதங்க அண்ணனுக்கு யார் இருக்காங்க? அப்ப இப்பவே வாங்கிக்

கடனை அடைச்சுட வேண்டியதுதானே! உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"உங்க அண்ணன் கூடப் படிச்சவரு ஒருத்தர் ரொம்பப் பணக்காரராம். படிச்ச உடனேயே... அப்பா பண்ணிட்டிருந்த பிஸினஸைக் கவனிக்கப் போயிட்டாராம். அவர்கிட்ட கேட்டா கண்டிப்பா பண உதவி பண்ணுவாருன்னு சொல்லிட்டிருந்தார்..."

"அப்பக் கேட்க வேண்டியதுதானே!" – வாயில் ஒரு வாய்ச் சாதத்தைப் போட்டுக் கொண்டே இயல்பாய்க் கேட்டாள் வனிதா.

"நம்ம கெட்ட நேரம் நம்மை எங்கே விட்டது? இந்நேரம் பார்த்து அவர் வெளிநாட்டிற்குப் போயிருக்காராம். இந்த மாதக் கடைசியில்தான் வருவாராம். அப்புறம்... இப்போது ரியல் எஸ்டேட் எல்லாம் விலை குறையப் போய்த்தானே இவ்வளவு கடன் தொல்லை!

"கணினித் துறை முன் போல் பிரகாசமாயிடுத்துன்னா ரியல் எஸ்டேட்டும் ஏறிவிடுமே... அப்போது உன் அண்ணன் எதிர்பார்த்த மாதிரி எல்லாம் நன்றாக நடைபெற ஆரம்பித்து விடுமே... வனிதா!"

ஆமாம்... அரசாங்க வேலை கூட மதிப்புக் குறைவு என்று எண்ணும்படியாக... தனியார் துறையும் கணினித் துறையும் போட்டி போட்டுக் கொண்டல்லவா பிரகாசித்தன.

படிப்பு முடித்து... வேலை கிடைக்குமா என்ற சான்றிதழ்க் கோப்பைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு கம்பெனி கம்பெனியாகப் படியேறியது எல்லாம் அந்தக் காலம்.



படித்து முடித்து வெளி வருமுன்பே... படிப்பு முடிய ஓராண்டு இருக்கும் போதே... படித்து முடித்து வெளி வரும் மாணவர்களைக் கொத்திக் கொண்டு போக கம்பெனிகள் வேலைக்கான உத்தரவை நீட்டின.

இன்று அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடி, இந்தியாவையும் விட்டு வைக்கவில்லையே... ஆர்டர் கொடுக்க ஆளில்லை... இருப்பவர்களே தண்டம் என்ற நிலைமை!

அவர்களுக்கு மட்டுமா வேலை போனது! அதன் தாக்கம் விலைவாசியிலிருந்து வீட்டுக் கடன் வரை எல்லாவற்றிலும் அல்லவா எதிரொலிக்கிறது.

எல்லாம் ஒழுங்காகப் போகும் என்றல்லவா இதை ஆரம்பித்தான் முத்தையன்.

நீண்ட பெருமூச்சொன்று எழுந்தது மதியழகியிட மிருந்து.

சமையலை விரைவாக முடித்து விட்டு இரண்டு தோசையை விண்டு போட்டுக் கொண்டு கையில் பையை எடுத்துக் கொண்டு அத்தையிடம் சொல்லிக் கொண்டு படி இறங்கினாள் மதி.

"என்னடி இது! புருஷனையும் காணோம்... அவன் விட்டுப் போன கடனுக்கு என்ன வழி பண்ணுவோம்னு ஒரு கவலையும் இல்லை... இவகிட்ட? ஏதோ எதுவுமே நடக்காத மாதிரி... பையைத் தூக்கிகிட்டு... 'ஆபீஸுக்குப் போயிட்டு வர்றேன்... அத்தை!'ன்னுட்டுப் போறா...!

"இப்படியும் ஒருத்தி இருப்பாளாடி! அவனைக் காணோமே... சாப்பிட்டானோ என்ன பண்ணினானோ? எங்கே தங்கினானோன்னு கவலை வேண்டாம் இவ கிட்ட...?"

"அம்மா! கொஞ்சம் நிறுத்தும்மா. அண்ணிக்கு மட்டும் கவலையில்லைன்னு உனக்குத் தெரியுமா? நேற்று ராத்திரி பூராவும் அண்ணி ரூம்ல இருந்து அழுகைச் சத்தம் சன்னமா கேட்டுட்டே இருந்தது உனக்குத் தெரியுமா!

"நீதான் தூக்க மாத்திரை போட்டுட்டு தூங்கிட்டியே... உனக்கு என்ன தெரியும்?

"பாவம்மா... அண்ணி! நீயும் நானும் வீட்டோட இருக்கோம். துக்கம் தாங்க முடியாம மூலையோட உட்கார்ந்திருக்கலாம்.

"அண்ணி அப்படியா... தனியார் நிறுவனம். எத்தனை நாளைக்குத்தான் லீவு தருவாங்க? ஆபீஸ் கிளம்பிட்டதால அண்ணியோட வருத்தத்தைக் குறைச்சு எடை போடா தேம்மா...!"

"நீ என்னிக்கு உன் அண்ணியை விட்டுத் தந்து பேசியிருக்க... நீயும் உன் அண்ணனும்தான் இவளுக்கு இவ்வளவு இடம் கொடுத்திருக்கீங்க..."

"உன் புலம்பலை விட்டுட்டு... சாமி கும்பிடு. சாமிதான் இனி உன் புள்ளை விஷயத்திலேயும் நம்ம குடும்ப விஷயத்திலேயும் ஒரு நல்ல வழி காட்டணும்..."

வனிதா உள்ளே போய் விட்டாள்.



# 6

மதியின் மனம் அன்று முழுக்க அலுவலக வேலையில் ஒட்டவே இல்லை.

இரண்டு முறை தப்பு செய்துவிட்டு... அடித்துத் திருத்தினாள். பின் அதை நாளை செய்து கொள்ளலாம் என்று எடுத்து வைத்து விட்டாள்.

அவரை இன்று எப்படியாவது பார்க்க வேண்டுமே... காத்துக் கொண்டிருப்பாரே...!

"நேற்று லீவு. இன்று மாலை பர்மிஷன். என்ன நாளைக்கு வந்து விடுவே இல்ல...?"

"கண்டிப்பா சார்! நாளை கண்டிப்பா வந்துடுவேன்..."

அனுமதி பெற்றுக் கொண்டு வெளியே வந்தாள். மிக அருகிலேயே பேருந்து நிலையம். இவள் அவசரத்தைப் புரிந்து கொண்டது போல... உடனேயே வந்து விட்டது இவள் செல்ல வேண்டிய பேருந்து.

பேருந்தில் ஜன்னல் புறமாக அமர்ந்தாள். பேருந்து நகர நகர... காற்று தென்றலாய்... பேருந்தினுள் பரவியது. ஆனாலும் இவள் புறம் வீசிய தென்றல் காற்று இவள் மனதின் அனலை ஆற்ற முடியாது தோற்றுப் போனது.

பேருந்து அந்தப் பகுதியில் வர வர... இவளை அறியாமல் பார்வை பேருந்தின் வெளியே அலைந்தது. அஸ்வத் அடுக்குமாடி குடியிருப்புகள் போர்டு... பிரகாசித்தது.

ஆமாம்... அஸ்வத் சரியான பெயர்தான் சூட்டப் பட்டிருக்கிறது. அஸ்வத்தாமா போல இதன் உள்ளே சென்று

விட்டால் வெளியே வர வழி தெரியாது... வழியில்லாது போகும் போலும்.

எவ்வளவு ஆனந்தமாகப் போய்க் கொண்டிருந்தது தங்கள் வாழ்க்கை. அன்பான கணவன். இருவருக்கும் ஓரளவு கணிசமாகக் கிடைக்கும் சம்பளத்தில் வீட்டுச் செலவு போக... நன்றாகவே சேமிக்க முடிந்தது.

அதைக் கொண்டு ஜாம் ஜாமென்று வனிதா திருமணத்தை முடித்திருக்கலாம். நகை அத்தனையும் அத்தை ஏற்கெனவே சிறுகச் சிறுக வாங்கி வைத்திருந்தாள்.

இரண்டு குழந்தைகள் கூட வேண்டாம். ஆணோ... பெண்ணோ ஒன்று போதும். நம் அன்பும் சரி... சொத்தும் சரி... அந்த ஒரு குழந்தைக்கு மட்டுமே... அதற்குப் போட்டியாக இன்னொன்று கூட வேண்டாம்... என்றெல்லாம் எத்தனை கனவுகள்!

முதலில் முத்தையன் சொன்ன யோசனை... வீட்டில் எல்லாருக்குமே பிடித்திருந்தது.

அவர்கள் வீடு... முத்தையன் அப்பா அந்தக் காலத்தில் கட்டியது. கொஞ்சம் பழைய மோஸ்தரில் கட்டியது என்றாலும் தனி வீடு.

அதில் பின்புறத்தை மட்டும்... முத்தையன் தன் திருமணத்திற்குப் பிறகு கொஞ்சம் மாற்றி... இரண்டு அறைகள் புதிதாகக் கட்டி... மாற்றியமைக்க விரும்பினான்.

சாரதாமணியும் அதற்கு மறுத்துப் பதிலேதும் சொல்லவில்லை.



ஹாலை ஒட்டிய அறையை முத்தையன் பயன் படுத்தினாலும்... அவர்களின் சிரிப்பொலியும் பேச்சொலியும் வனிதாவின் மனத்தில் சலனத்தை உண்டு பண்ணக்கூடும்.

அவர்களுக்கும் அது கூச்சத்தைத் தரலாம். தனக்கு இப்போது திருமணமே வேண்டாம் என்றும்... வனிதாவின் திருமணத்தை முதலில் நடத்தி விடலாம் என்றும்... ஒற்றைக் காலில் நின்ற முத்தையனைச் சாரதாதான் வற்புறுத்தித் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ள வைத்திருந்தாள்.

தானோ... எந்தச் சுபகாரியங்களுக்கும் லாயக்கில்லாத விதவை. பெண் பார்க்க வந்தால் உபசரிக்கவோ... ஏன், நாளை கல்யாணம் கூடி வந்தால்... தாரை வார்த்துக் கொடுக்கவோ கூட ஆளில்லை. அதற்காகவாவது உடனே தனக்கொரு மருமகள் வர வேண்டும் என்று மகனுக்கு முதலில் திருமணம் செய்து வைத்திருந்தாள்.

மருமகள் மூலமாகவாவது நிறையச் சொந்த பந்தங்கள் வேண்டும் என்று நினைத்தவளுக்கும் அந்த விஷயத்தில் ஏமாற்றம்தான். மதியின் பெற்றோர் சிறு வயதிலேயே ஒன்றாகத் தவறிவிட... ஓரளவு படித்து முடித்து விபரம் தெரியும் வரை... அவளையும் அவள் அண்ணனையும் அவளது மாமாதான் வளர்த்து வந்திருந்தார்.

அண்ணனுக்கு வேலை கிடைத்ததும்... இனியும் மாமாவிற்குப் பாரமாய் இருப்பது சரியில்லை என இருவரும் ஒரு வீடு பார்த்துக் குடிவந்து விட்டனர்.

வனிதாவை மனதில் வைத்துக் கொண்டு செய்யும் மாற்றங்கள் சாரதாவை ஒப்புக் கொள்ள வைத்தன. கூடவே

இன்னொரு அறையும் கட்டி விட்டால்... நாளை வனிதாவும் மாப்பிள்ளையும் வரும்போது தங்கிக் கொள்ள வசதியாக இருக்கும்.

ஆனால், இரண்டு அறைகள் கட்ட... ஒரு லட்சமா? - கேட்டு மலைத்து விட்டான் முத்தையன்.

மதிதான் அந்த யோசனை கூறினாள்.

"எப்படியும்... ஒவ்வொரு ஆண்டும் உங்களுக்கு ஒரு வாரம் மெயின்டனென்ஸ் வேலைக்கென கம்பெனியே விடுமுறை தருவார்கள்.

"அதுவும் இந்த மாதக் கடைசியில் வருகிறது. நீங்களே பேசாமல் சிமெண்ட், மணல், ஜல்லி என்று சாமான்களை மலிவாக வாங்கிப் போட்டு மேஸ்திரியை வேலைக்கு அமர்த்தி உங்கள் மேற்பார்வையில் கட்டுங்களேன்..."

மதியின் இந்த யோசனை எல்லாருக்கும் பிடித்திருந்தது. இதனால் ஓரளவு பணம் மிச்சமாகும் என்று எல்லாரும் நினைத்திருந்த போதிலும்... முடிந்தபின் கணக்குப் போட்டுப் பார்த்தபோது வியப்பால் புருவங்கள் நிமிர்ந்தன.

"என்ன ஐம்பதாயிரம்தானா ஆகியிருக்கிறது? பாதிக்குப் பாதி லாபம். நாம் மட்டும் அண்ணியின் யோசனையைக் கேட்காமல்... அப்படியே லட்ச ரூபாயைக் கொடுத்து கான்ட்ராக்ட் கொடுத்திருந்தால்...

அண்ணி! உங்களால்தான் ஐம்பதாயிரம் லாபம்!" - வனிதா.



'ஐம்பதாயிரம் மீதம் என்று கூறாமல்... ஐம்பதாயிரம் லாபம்!' என்று வனிதா கூறிய வார்த்தைகள் முத்தையனை வேறு விதமாக யோசிக்கத் தூண்டின.

## 7

**கா**லம்தான் எப்படித் தன் கரங்களால்... மனதர்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போடுகிறது?

இன்று வருத்தப்பட்டு என்ன பயன்? இப்படி நடக்குமென்று யார்தான் எதிர் பார்த்தார்கள்?

இன்று தன்னை ஏசும் அத்தை கூட... அன்று அவர் தன் திட்டத்தை மெல்ல விவரித்தபோது... திறந்த வாயை மூடாமல் மலைத்துப் போயல்லவா கேட்டுக் கொண்டிருந்தார்கள்!

"நெஜமாடா முத்தையா! நீ சொல்றபடி நிஜமா நடக்குமா?"

"என்னம்மா... இவ்வளவு தூரம் எடுத்துச் சொல்றேன். என் மேல் நம்பிக்கை யில்லையா?"

"அதுக்கில்லைடா! பெரிய வேலையாய் இல்ல எடுத்துச் செய்யலாம்னு சொல்றே? அது விஷயமா நமக்கு ஒண்ணுமே தெரியாதேடா!"

"இப்ப மட்டும் என்னம்மா! நானும் நீயுமா செங்கல் எடுத்துப் பின்னாடி ரூம் கட்டினோம். அது மாதிரிதான்ம்மா. எல்லாம் மேஸ்திரி பார்த்துப்பாரு. இப்ப நமக்கு ரூம் கட்டிக்

கொடுத்தாங்க இல்லையா! அந்த மேஸ்திரி, சித்தாள்... அந்த டீமை அப்படியே வளைச்சுப் போட்டுடணும்...!

"புதுசா லேஅவுட் போடுறாங்க இல்லையா... அங்க முதல்லயே புக் பண்ணினா... ஈஸியா அரை கிரவுண்டோ, அதுக்குக் கொஞ்சம் மேலயோ இருபது லட்ச ரூபாய்க்கு வாங்கிடலாம்.

"ஒரு டுபுள் பெட்ரூம் வீடு கட்ட ஒரு ஏழு, எட்டு லட்சம். இதுலேயும் மொத்தமா சாமான் வாங்கிப் போட்டு கூலி மட்டும் கொடுத்தா... ஆறு லட்சத்துல முடிச்சிடலாம். மொத்தம் இருபத்தாறு லட்சம் ஆச்சா... கண்ணை மூடிண்டு அதை முப்பது லட்ச ரூபாய்க்கு வித்துடலாம். ஆறே மாசத்துல... நாலு லட்ச ரூபாய் லாபம்... எப்படிம்மா?"

"கேட்க நல்லா இருக்கு. நடைமுறையில் சரியா வருமாடா?"

"எல்லாம் சரியா வரும்மா! நிறைய யோசிச்சுத்தான் இந்த முடிவே எடுத்திருக்கேன். என்ன மதி... என்ன வனிதா... ஓ.கே. தானே!"

"அதெப்படிங்க... ஈஸியா முப்பது லட்ச ரூபாய்க்கு வித்துடலாம்னு சொல்றீங்க... ஒருவேளை நிலத்தோட மதிப்பு குறைஞ்சு போச்சுன்னா...?"

"அதெப்படி மதி! இப்ப நம் கண் முன்னாடியே எப்படி ரியல் எஸ்டேட் உயர்ந்துகிட்டே போறது! கடைசிப் பத்து வருஷத்திலேயே... ஒன்றிற்கு நான்கு மடங்காக உயர்ந்திருக்கே!

"பாலம் என்ன... நிறைய ரயில்வே ஸ்டேஷன்கள்... பஸ் வசதி... இப்படி எல்லா வகையிலும் வசதி பெருக...



பெருக... மக்களோட அடுத்த எண்ணம்... சொந்த வீட்டை நோக்கி நகர்றதுதானே! கண்டிப்பாகப் பல லட்சம் லாபம் பார்க்கலாம்..."

"அண்ணி! அண்ணன் சொல்றது கரெக்ட்தான் அண்ணி! கொஞ்சம் ரசனையோட நம்மை மாதிரி மிடில் கிளாஸ் மக்களோட தேவைக்கேற்றபடி கட்டினால் விலையைப் பொருட்படுத்தாம ஈஸியா புக் பண்ணிடு வாங்க..."

நீண்ட யோசனைக்குப் பிறகே மதியழகி சரி என்றாள்.

அதிலும் முதல் பூஜை போட்டு... கட்டட வேலை ஆரம்பமாகி... அஸ்திவாரம் வந்தாயிற்று.

முத்தையாவின் பாங்க் பேலன்ஸ்... நண்பர்களிடம் திரட்டிய பணம் என்று லட்ச ரூபாய் அஸ்திவாரத்தில் காணாமல் போனது.

அதில் மனசொடிந்திருந்தபோது... எதிர்பாராத விதமாக அவன் போர்டில் எழுதிப் போட்டிருந்த கைபேசி எண்களைப் பார்த்து விட்டு ஏராளமான தொலைபேசி அழைப்புகள் வரத் தொடங்கின.

அவர்கள் நினைத்ததை விடவும்...

அந்த இடத்திற்குக் கிராக்கி அதிகம் என்று புரிந்தது.

அட்வான்ஸ் வாங்கி அதில் மேற்கொண்டு கட்டி... முதல் வீட்டை முடித்து... நிமிர்ந்து பார்த்தபோது சுளையாக நான்கு லட்ச ரூபாய் கடனெல்லாம் அடைத்தது போக லாபமாய் நின்றது.

# 8

'பணம் பத்தும் செய்யும்!' என்பது உண்மைதான் என்று நினைத்தாள் மதியழகி.

ருசி கண்ட பூனையாய் முதலில் ஒரு வீடு கட்டி... லாபம் பார்த்த முத்தையன்... அலுவலக நேரம் போக... மீதி நேரம் இந்த ரியல் எஸ்டேட்டில் முழுவதுமாக இறங்க நினைத்து அகலக் கால் வைத்தான். அதுதான் இவை எல்லாவற்றிற்கும் காரணமானது.

இப்போது ஒன்றரை கிரவுண்ட் நிலம் வாங்கி... அதில் கீழே இரண்டு வீடுகள்... மேலே இரண்டு வீடுகள் என்று பிளான் போட்டு... அதற்கு வங்கியில் கடன் வாங்கியது பத்தாமல்... மேலே சேட்டிடம் வேறு வாங்கினான்.

மேலே பல லட்சம் ரூபாய் லாபம் வைத்து விற்கும் போது... இந்தக் கடனெல்லாம் போக... கணிசமாக லாபம் கையில் பார்க்கலாம்!

எல்லாம் அப்போதிருந்தது போலவே... சரியாகப் போயிருந்தால்... முத்தையன் எதிர்பார்த்தது போல... இந் நேரம் இந்த வீடுகள் கட்டி முடிந்திருக்கும்.

ஆனால் ஏற்ற இறக்கங்கள் உள்ளதல்லவா வாழ்க்கை!

யாரையும் அது மேலே மேலே ஏற்றிக் கொண்டே மட்டுமே போவதில்லை.

பொருளாதார நெருக்கடி... கணினித் துறையில் உள்ளவர்களை மட்டுமா பதம் பார்த்தது... கணினித் துறையில் வேலை வாய்ப்புகள் பாதிக்கப்பட்ட உடனேயே... அந்த வேலை வாய்ப்புடன் இணைந்து கூடவே ஏறுமுகமாய் இருந்த ரியல் எஸ்டேட் துறையும் அடிவாங்கியது.



முன்பு அஸ்திவாரம் எடுக்கும்போதே வீடு புக் ஆனது போய்... இப்போது வீடு கிட்டத்தட்ட முடிவடையும் தருவாயில் இருந்தும்கூட... அதை வாங்க ஆளில்லை.

மேற்கொண்டு கட்டப் பணமும் இல்லை. அஸ்திவாரம் எடுத்தவுடனே... அதை விற்று... அந்த முன்பணம் வாங்கி மேற்கொண்டு கட்டி...

முத்தையன் திட்டமிட்டதெல்லாம் நடக்கவில்லை. அதை அப்படியே விடவும் முடியாது. கடனை... உடனை வாங்கியாவது மேற்கொண்டு முழுமையாகக் கட்ட வேண்டும்.

இந்தப் பொருளாதார நெருக்கடி கூடிய விரைவில் சரியாகி விடும், நிமிர்ந்து விடலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தாலும்... அவன் மேல் நம்பிக்கை அவனுக்குக் கடன் கொடுத்தவர்களுக்கு இல்லையே!

நாளுக்கு நாள் வட்டி ஏறிக் கொண்டே போய்க் கடன் சுமை தலையை அழுத்தத் துவங்கியது. இனி வேறு வழியிலாவது பணம் புரட்டி... இந்த வெளியில் வாங்கிய கடன்களை அடைக்க வேண்டும் என்று முத்தையன் முடிவெடுத்த போது வட்டியே எங்கேயோ போய் விட்டது.

மதியழகி நினைத்துக் கொண்டாள். 'இப்படிக் கெட்ட நேரம் தான் வருவதோடு மட்டுமல்லாமல் மற்ற எல்லாக் கெட்ட தேவதைகளையும் கூட்டிக் கொண்டல்லவா வந்து விட்டது.

'இவருக்கு மிகவும் நெருக்கமான நண்பன்... இவ கேட்டுப் பண உதவி மறுக்காதவன்... இப்போது வெளிநாட்டுக்குப் போக வேண்டும். அவர் திரும்ப ஒரு மா காலமாகுமாம். இருக்கும் வீடும் ஏற்கெனவே முதலி அடமானம் வைத்தாகி விட்டது. அதையும் விற்று விட்டு கல்யாண வயதில் தங்கையை வைத்துக் கொண்டு எங்கே போவது?'

முத்தையன் கண் கலங்கி அன்றுதான் பார்த்தாள் மதி.

'இன்னும் ஒரு மாதம்தான் மதி! துரை வந்து விட்டால் கடனாக வாங்கியாவது சேட் கடனை அடைத்து விடுவேன். அதுவரை எப்படியாவது சமாளிக்க வேண்டும்!' என்று கூறிக் கொண்டிருந்தவர்... குடும்பச் சுமை முழுவதையும் தன்னைச் சமாளிக்க விட்டு விட்டு இப்படி நட்டாற்றில் விட்டு விட்டாரே!'

பேருந்து அவ்விடத்தை விட்டகன்று வெகு நேர மானாலும், இவள் மனம் அந்தச் சூழலை விட்டு வெளியே வருவேனா என்றது.

யாருமறியாமல் கூந்தலைச் சரி செய்து கொள்வது போல... கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

ஆச்சு! அடுத்து அவள் இறங்க வேண்டுமே!

## 9

**கா**ல்களை எட்டிப் போட்டு நடந்தாள் மதியழகி.

அவரைக் காணும் பரபரப்பு. 'எப்படி இருக்கிறாரோ?'



கதவை லேசாகத் தட்டியதுதான் தாமதம்...

உடனே திறந்தது கதவு.

"வாம்மா... மதி! இவன் இப்போ உன்னைப் பற்றிதான் பேசிக் கொண்டிருந்தான். உள்ளே வா!" - நடுத்தர வயதுடைய அந்தப் பெண்மணி வரவேற்க... அதற்குப் பதிலேதும் சொல்லாமல்... உள்ளே போனாள் மதி.

உள்ளே நுழைந்ததுமே... எதிர்ப்பட்ட அவனைப் பார்த்து உடனே தானாகக் கண் கலங்கினாள்.

"மதி! எப்படி இருக்க? ஏன் நேற்றே வரலை? என்னாச்சு?"

வார்த்தைகள் தொண்டையை விட்டு வெளியேறாமல் சதி செய்தன. கண்ணீரை மறைத்துக் கொள்ள... தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

இவர்கள் இருவரையும் தனியே விட்டு அந்த நடுத்தர வயதுப் பெண்மணி வெளியேற... மடை திறந்த வெள்ளம் போலானது மதியழகியின் கண்கள்.

"என்னடா மதி! இதோ பாரு... அழாதே. நான் இருக்கேன்ல. அப்புறம் என்ன? என்னை நம்புறியா... இல்லையா?"

ஒருபுறம் கண்ணீருடன் தலையசைத்தாள்.

"உங்களை நம்பாம யாரை நம்பப் போறேங்க?"

"குட்! அப்ப அழாம... என்ன நடந்துதுன்னு சொல்லு. எல்லாரும்..."

அவள் நேற்று முதல் நடந்ததையெல்லாம் பத்து நிமிஷம் செலவழித்துச் சொல்லி முடித்தாள்.

திரும்பவும் எப்போது இவரைப் பார்க்க முடியுமோ என்ற ஆதங்கத்திலேயே... இன்னும் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தாள்.

இவரால் எவ்வளவு கஷ்டப்பட்டாலும்.. இவரைக் கோபிக்க என்னால் முடியவில்லையே... ஏன்?

இவருடைய சூழ்நிலை அப்படி! பாவம் இவர்... என்றல்லவா எண்ணத் தோன்றுகிறது.

இதுதான் காதல் என்பதா! என்னை அறியாமல் இவர் மீது அவ்வளவு அன்பு செலுத்துகிறேனோ?

வீட்டைச் சுற்றிப் பார்த்தாள் மதி. சௌகர்யமாக அதே நேரம் பாதுகாப்பாகத்தான் உள்ளது வீடு.

அந்த அறையும் ஒருவர் தங்கத் தாராளம்! ஒருவருக் கொருவர் ஆறுதல் சொல்வதிலேயே கழிந்தது பொழுது.

"இரு... நான் வந்து... உன்னை..."

"ஐயையோ! வேண்டாம். நானே போய்க் கொள் கிறேன்."

திருடியைப் போல்... அக்கம் பக்கம் பார்த்தவாறே வேகமாய் நடையைப் போட்டாள் மதி.

வீட்டில் எத்தனை பிரச்சினை இருந்தாலும் இவரைப் பார்த்து விட்டுப் போவது பெரும் தெம்பினை மனதிற்கு அளித்திருந்தது.



இனி எந்தப் பிரச்சினை வந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம்.

இவள் இவ்வாறு தனக்குத் தானே தீர்மானித்துக் கொண்டது தெரிந்தோ என்னவோ... அடுத்த பிரச்சினை அவளை வரவேற்க வீட்டில் தயாராய் இருந்தது.

## 10

"நில்லுடி! எங்கே போயிட்டு வர்ற?"

"அத்தை! என்னத்தை...! ஆபீஸுக் குத்தான்..."

"அதுதான் நீ ஆபீஸுக்குப் போன லட்சணத்தை ஆபீஸில் கேட்டப்ப சொன்னாங்களே... நாலு மணிக்கே ஆபீஸை விட்டுக் கிளம்பினவ... இப்போ... இவ்வளவு நேரம் எங்கே போயிட்டு வர்ற?"

திடுக்கிட்டுப் போனாள் மதி.

இப்படியொரு தாக்குதலை அவள் எதிர்பார்த்திருக்க வில்லை.

பூனை கண்களை மூடிக் கொண்டு உலகமே இருண்டு விட்டதாக நினைத்துக் கொள்வதைப் போல் யாருக்கும் தெரியாதென்று நினைத்தது எப்படித் தெரிந்தது?

இப்போது அதுவல்ல முக்கியம்!

அத்தையின் கேள்விக்குப் பதில் சொல்லியாக வேண்டுமே... அத்தையிடம் எங்கே போனாள் என்பதைக் கூற முடியுமா? நம்புவார்களா?

கால்கள் தரைக்குக் கீழே நழுவுவதைப் போல் உணர்ந்தாள்.

ஒருவேளை ஆபீஸில் ஃபோன் செய்து கேட்டிருப் பார்கள் போலிருக்கிறது. யார் ஃபோன் செய்திருப்பார்கள்? வனிதா!

எதற்கு ஃபோன் செய்திருக்கிறார்கள் என்பது தெரி யாமல் என்னவென்று பதில் சொல்வது?

ஒருவேளை ஒன்றுமே தெரியாமலிருந்து தான் உளறி விட்டால்...

சேட்டு திரும்பப் பணத்திற்காக வந்து நின்றிருப் பானோ? அது ஒரு வார காலம் அவகாசம் கேட்டிருக் கிறதே... அதற்குள் யானைப் பசிக்குச் சோளப் பொரி போல... சேட்டிற்குக் கொஞ்சமாவது பணத்தைக் கண்ணில் காட்ட வேண்டும்...!

சேட் வரவில்லையென்றால்... ஒருவேளை அவரைப் பற்றி ஏதேனும் செய்தி கிடைத்திருக்குமோ?

எத்தனை எத்தனை சாத்தியங்கள் உண்டோ... அத்தனையும் விநாடி நேரத்தில் மனத்திரையில் வந்து போயின.

"அவரைப் பற்றி விசாரிக்கத்தான் போயிருந்தேன் அத்தை..." - சமாதானப்படுத்தும் குரலில் சொன்னாள் மதி.

"அவனைப் பற்றியா?"

"ஆமாம்... அத்தை! சட்டெனத் தோன்றியது. அவர் அவருடைய அலுவலகத்தில் என்ன சொல்லி விட்டு



வந்திருக்கிறார்... வேலையை விட்டு விட்டாரா என்று விசாரிக்கப் போனேன் அத்தை!"

இதுவரை அவள் தாமதமாக வந்ததற்குக் கடுகடு வெனக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தவள்...

இவள் போன காரியம் பற்றிக் கூறக் கேட்டதும் இளகிப் போனாள்.

இப்படி ஒரு இக்கட்டான நிலை வந்தால்... சொல்வ தற்கெனத் தயார் செய்து வைத்திருந்த பதிலை ஞாபகப் படுத்திக் கொண்டாள்.

"போய் விசாரிச்சியா? என்ன சொன்னார்கள்? லீவு போட்டு விட்டுத்தானே போயிருக்கிறான். வந்து விடுவதாகச் சொல்லி விட்டுத்தானே சென்றிருக்கிறான்?"

"அதுதான் இல்லை அத்தை! அவர் வேலையை ராஜினாமா செய்து விட்டுத்தான் போயிருக்கிறார். இவர் நண்பர் முகுந்தனிடம் வேலையை விட்டதும்... அவர்கள் கடைசி செட்டில்மெண்டாகக் கொடுத்த செக்கைக் கொடுத்து... வங்கியில் போட்டு... பின் பணத்தை எடுத்து நம்மிடம் கொடுக்கச் சொல்லி விட்டுப் போயிருக்கார்... அத்தை!"

சொல்கையிலேயே கண்கள் தளும்பி... குரல் தழு தழுத்தது மதிக்கு.

## 11

மதியழகியின் அழுகையில் மனம் கரைந்தாலும் அதைச் சட்டெனக் காட்டிக் கொள்ள மனம் வரவில்லை சாரதா மணிக்கு.

"சரி... சரி! அப்படிப் போறவ ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போயிருக்கலாமில்ல... காலம் வேற கெட்டுக் கிடக்கு. இவனையும் காணோம்... ஆபீஸ் விட்டு அப்பவே கிளம்பினவ... இன்னமும் வந்து சேரலைன்னா... கவலை வராதா? சரி... சரி... உள்ளே போ!"

கண்களைத் துடைத்தவாறே... உள்ளே போனாள் மதி.

அவளுக்கு அத்தையின் சுபாவம் நன்கு தெரியும். அவள் இப்படித்தான்...!

படபடவெனப் பொரிந்தாலும்... உள்ளுக்குள் வனிதாவைப் போன்றே தன் மீதும் நிரம்ப அக்கறை வைத்திருப்பவர் என்பதை அவள் அறிவாள்.

எனவேதான் அவள் எவ்வளவு பேசினாலும்... அதை மனதின் அடி வரை கொண்டு செல்லாமல் உடனே மறந்து விடப் பழகிக் கொண்டாள்.

கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டு சாமி விளக்கு ஏற்றினாள்.

ரியல் எஸ்டேட் துறை மீண்டும் பழையபடி வந்து இந்தக் கடன் தொல்லை தீருமா...? கடவுளே!

அவர் கொடுத்து விட்ட பணம் இருக்கிறது. அவர் ஆபீஸில் கொடுத்த பணம் என்று சொல்லி... ஒருவாறு ஒரு வாரம் வரை ஓட்டி விடலாம்.

அவர் கொடுத்த பணத்தில் ஒரு ஐயாயிரமாவது அடுத்த முறை சேட் வரும்போது... கொடுத்து விட வேண்டும்



ஆனால்... உண்மையில் இவள் தொலைபேசி மூலம் விசாரித்ததில்... இவர் பெயரில் வர வேண்டிய பணத்தை விட... ஆபீஸில் இவர் வாங்கியிருந்த கடன்களுக்குப் பிடித்தம் செய்ய வேண்டியிருப்பது அதிகம் என்பதால்... கைக்கு ஒன்றும் வராது என்று கைவிரித்து விட்டிருந்தனர்.

ஆனால்... முத்தையனின் மேனேஜர் சொன்ன யோசனை மதியை யோசிக்க வைத்தது.

"முத்தையன் நடுவில் ரியல் எஸ்டேட்... நிலம் வாங்கிக் கட்டடம் கட்டி விக்கிறதுன்னு... வேற பாதைக்குப் போயிட்டானேன்னு நாங்கள் பேசிக்காத நாளில்லை. முத்தையன் நல்ல திறமையான பையன்ம்மா...

"அவன் ஏதோ ஒரு வேகத்துல ராஜினாமா கடிதத்தைக் கொடுத்திருந்தாலும் அதை கன்ஸிடர் பண்ணணுமான்னு யோசிச்சிட்டிருக்கேன்...."

"அவர்தான் ஆபீஸ் வரலையே சார்! இனிமேலும்..."

"அதை நான் பார்த்துக்கிறேன்ம்மா... அவனை மாதிரி ஒரு திறமையான ஸ்டாஃப்பை இழக்க நாங்கள் விரும்பலை. அவன் வர்ற வரைக்கும் இது சம்பளமில்லாத லீவா இருந்துட்டுப் போகட்டும்...

"ஒரு மாசம் வரை பார்ப்போம். அதுக்குள்ள முத்தையன் வந்தா... அவன் வேலையில ஜாய்ன் பண்ணட்டும். என்னம்மா சொல்றே?"

இப்படி ஒரு யோசனையை முன்வைக்கக் கூடத் தனக்குத் தோணவில்லையே... என்று வியந்தாள் மதி.

கேட்காமலேயே இப்படி ஒரு உதவியைச் செய்ய முன்வந்திருக்கும் மேனேஜருக்குப் பதில் சொல்ல... வார்த்தைகளைத் தேடினாள்.

"ரொம்ப நன்றி சார்! அவர் ராஜினாமா கடிதத்தைக் கொடுத்து விட்டது தெரிந்ததும்... அவ்வளவுதான் அவருடைய வேலை என்ற முடிவுக்கே வந்து விட்டேன்!

"அவர் வேலை போகாதபடி செய்யும் இந்த உதவியை நான் மறக்கவே மாட்டேன் சார்!"

"நீ கவலைப்படாதேம்மா... எல்லாம் நல்லபடியா நடக்கும்."

வியந்து போனாள் மதி.

இந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட நல்ல மனிதர்.

அத்தையையும் வனிதாவையும் பொறுத்தவரை வேலை போனது போனதாகவே இருக்கட்டும்.

இல்லையென்றால்...

அவன் எப்படி ஒரு மாதத்திற்குள் வந்து விடுவான்...

அவன் கடன் தொல்லை ஒரு மாதத்திற்குள் எப்படிச் சரியாகும்...? - என்றெல்லாம் விதவிதமாய் எழும் கேள்விகளுக்குப் பதிலுக்கு எங்கே போவாள்?

எதையோ சொல்லப் போய்...

அவள் ஒருவேளை உண்மையை உளறி விட்டால்...?



# 12

அடுத்த நாளும் அதற்கடுத்த நாளும் சூன்யமாகக் கழிந்தன.

திருமணமானதில் இருந்து... முத்தையனை விட்டுத் தனியே இருந்ததே இல்லை என்பதால்... மதியழகி நிரம்பவே வெறுமையாக உணர்ந்தாள்.

நல்லவேளை! தினம் ஒரு முறையாவது அவருடன் தொலைபேசியில் பேச முடிகிறதே என்று அந்த மட்டும் மனதிற்குள் ஆறுதல் பட்டுக் கொண்டாள்.

அந்த ஆறுதல் எல்லாம் சில மணித் துளிகள்தாம் வேலை செய்தன.

திரும்ப... கணவரை நினைத்து நினைவுகள் சண்டித்தனம் செய்தன.

இரவெல்லாம்... முத்தையன் தன்னைப் பெண் பார்க்க வந்தது முதல்... கல்யாணம்... அதற்கடுத்த சடங்குகள் என... விட்டத்தை வெறித்தவாறே நினைவுகளில் மூழ்கினாள்.

கண்களில் கண்ணீர் வழிந்து... உதடுகளில் பட்டு உப்புக் கரித்த பொழுதுதான்... தான் அழுவதையே உணர்ந்து... கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

இவள் தனியே ரூமிற்குள் அழுதால் என்றால்...

சாரதாமணியும் வனிதாவும் ஹாலில்... ஒருவருக்கொருவர் அறியாது... மனதில் சுமையைச் சுமந்திருந்தனர்.

ஆக மூவருக்குமே... அந்த இரவு கொடிய இரவாக நீண்டிருந்தது.

முத்தையனுக்கும் அங்கே உறக்கம் தொலைந் திருந்தது. அசட்டுத் தைரியம்தான் அவனது பலம்... பலவீனம் எல்லாமே.

நினைவுகள் பின்னோக்கி... அவன் வாழ்க்கைச் சம்பவங்களை அசை போட்டன.

இருந்த கம்பெனி வேலையில் கிடைத்த வருமானமே போதுமானதாக இருந்தது. போதாக் குறைக்கு வேலைக்குப் போகும் மனைவி.

ஒரு அசட்டுத் தைரியத்தில்தான் ரியல் எஸ்டேட் தொழிலில் இறங்கினான். நிலம் இவ்வளவு... வீடு கட்ட இவ்வளவு... கட்டி இத்தனைக்கு விற்றால் லாபம் இவ்வளவு என மனக்கோட்டை... சுலபமாக வியப்பாக இருந்தது.

நடைமுறையிலும் முதல் வீடு கட்டிக் கணிசமான லாபம் பார்த்தபின்... அசட்டுத் தைரியம் போய்... தன்னம்பிக்கை வந்திருந்தது.

ஒரு நிலையில் பார்த்துக் கொண்டிருந்த வேலையையே விட்டுவிட்டு முழு மூச்சாக இதில் இறங்கி விடலாமா என்றுகூட யோசித்ததுண்டு. ஆனால் இப்படி அத்துறையே திடீரென இறங்கிப் போகும் என்பது அவன் எதிர்பாராதது.

நண்பன் ஃபாரினிலிருந்து வந்து அவனிடமிருந்து பணம் கேட்டு வாங்கும் வரை சேட்டைச் சமாளிக்க முடியாது என்று இந்தத் தலை மறைவாகும் யோசனை தோன்றி யிருந்தது.



இப்போது நிதானமாக யோசிக்கையில்... அது எவ்வளவு தப்பு என்று மூளை இடித்துரைத்தது.

'நீ ஆண்பிள்ளை... உன்னாலேயே சமாளிக்க முடியாதபோது... மதி, வனிதா, அம்மா... மூவரும் பெண்கள்... அவர்களால் எப்படிச் சேட்டை எதிர்கொள்ள முடியும்? எத்தனை சினிமாக்களில் பார்த்திருக்கிறான். இது மாதிரி தருணங்களில்.. கடன் கொடுத்தவன் அவ்வீட்டுப் பெண்களை அசிங்கமாகக் கூப்பிட்டு...'

அதற்கு மேல் அவனால் நினைக்கக் கூட முடியாது போயிற்று. நினைக்கவே குலை நடுங்கியது.

அம்மா கூடப் பரவாயில்லை. வயதானவள் என்ற பரிதாபம் இருக்கக் கூடும். ஆனால் மதி, வனிதா... இரு வயசுப் பெண்களைத் தனியே தவிக்க விட்டு விட்டு இவன் மட்டும் இங்கே...

முத்தையனுக்கு அழத் தோன்றியது. ஆண்பிள்ளை அழலாமா?

ஆனால் நான் செய்திருக்கும் காரியம் மட்டும்... ஆண்பிள்ளையைப் போன்று வீரமானதா என்ன...?

அப்படியே... ஓடிப் போய்... அம்மா, மதியை அணைத்துக் கொண்டு கதறி... 'நான் இருக்கிறேன். கவலைப்படாதீர்கள்! மூட்டை தூக்கியாவது காப்பாற்றுகிறேன் உங்களை...' என்று இறைஞ்ச வேண்டும் போலிருந்தது.

அதற்குள் உள்ளே இருந்த சாத்தான் மனது வீறிட்டது. 'நீ மூட்டை தூக்கியாவது காப்பாற்றுவாயா? அப்படி வாழ்ந்து பழக்கப்பட்டவனா நீ...? ஏதோ சினிமாவில் வருவது

போல்... வசனம் பேசுகிறாயா! சென்ற மாதம் வரை... லட்சங்களில் கை மாற்றி... ராஜபோகமாக வாழ்ந்தவன் அல்லவா! உன்னால் கூலி வேலைக்குப் போக முடியுமா?

நீ வெளியில் வந்தால்... சேட் போலீஸில் புகார் கொடுத்தால்... அடுத்து நீ இருக்க வேண்டிய இடம் எது தெரியுமா? நீ ஜெயிலுக்குப் போனால்... ஒரேயடியாக மூவரும் நடு ரோட்டிற்கு வந்து விடுவார்கள்!

கொஞ்சம் பொறு. துரை வந்ததும்... அவன் எவ்வளவு பணம் வேண்டுமானாலும்... உன்னை நம்பிக் கடனாகத் தருவான். அவனிடம் வாங்கிச் சேட்டிடம் திருப்பி விட்டால்... ரியல் எஸ்டேட் பிசினஸ் கொஞ்சம் சரியானதும்... துரையிடம் வாங்கியதை அவனுக்குத் திருப்பி விடலாம்.

இப்போது கொஞ்சம் பொறுமை தேவை. எப்படியும் மதி சமாளித்து விடுவாள். அவ்வப்போது கொஞ்சம் பணம் சேட்டிற்குத் திருப்பி... அவன் வாயைத் தற்காலிகமாக... ஓரிரு வாரங்களுக்கு அடைத்து விட்டால் போதும். இரு வாரங்கள் மட்டுமே... அதற்குள் துரை வந்து விடுவான்.'

கொஞ்சம் நம்பிக்கை மனதில் ஊற...

புரண்டு படுத்தாலும் தூக்கம் வருவேனா என்றது... முத்தையனுக்கு!

# 13

மதியழகி சமையலறையிலிருந்து வாயைப் பொத்திக் கொண்டு அவசரமாக வாஷ்பேசினை நோக்கிப் போவதைப் பார்த்த சாரதாமணி துணுக்குற்றாள்.



இந்தப் பெண்ணும் பாவம்! திருமணமாகி வந்த நாள் முதல் தன்னை நேருக்கு நேர் நின்று பேசக்கூட அஞ்சுவாள். இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட சாதுவான பெண் மருமகளாக அமைந்தது ஆச்சரியம்தான் என்று சாரதாவே பல நாட்கள் நினைத்ததுண்டு.

தான் மேலுக்குப் புலம்ப முடிகிறதே தவிர... முத்தையன் இப்படி அம்போவென விட்டு விட்டுப் போனது தன்னை விட இப்பெண்ணுக்கு இன்னமும் பெரிய இழப்பென்பதைச் சாரதா உணராமல் இல்லை.

ஆனால் வாந்தி எடுக்க ஓடுகிறாளே... என்னவோ ஏதோவென்று போய் விசாரித்துத் தாங்கிக் கொள்ள ஏதோ ஒன்று தடுத்தது.

ஆனாலும் அதற்காகச் சும்மா இருக்க முடியவில்லை.

"வனிதா! என்னடி பண்றே? "

"என்னம்மா? ரூம்ல புக் படிச்சுட்டிருக்கேன்..."

மெல்லிய குரலில்... "உன் அண்ணி வாயிலெடுக்க வாஷ்பேஸினுக்கு ஓடறா! என்னன்னு போய்ப் பாரு... போ!"

"அண்ணி பேர்ல பாசமெல்லாம் இருக்கு. ஆனா காட்டிக்க மட்டும் மாட்டே!"

"அடிப் போடின்னா....!"

"அண்ணி!" - இருவரும் உள்ளறையிலிருந்து வந்தவாறே...

"அண்ணி! நீங்க வெட்கப்படறது கூட அழகாத்தான் இருக்கு. அண்ணன் இல்லையே பார்க்க..."

"அம்மா! உனக்குப் புரமோஷன் வந்தாச்சு. இனிமே நீ இப்படி அதிகாரம் பண்ணிட்டிருக்க முடியாது. உன்னை அன்பால அடக்கிக் கட்டிப் போட உன் பேரன் வரப் போறான்..."

"பேரனா!"

மதியின் முகம் வெட்கத்தில் சிவந்து. குனிந்து... உண்மையிலேயே மதியோடு போட்டி போட்டுக் கொண் டிருந்தது.

"என்ன மதியழகி! வனிதா சொல்றது....!"

குரலில் இவ்வளவு கடுமையை வனிதாவும் மதி யழகியும் எதிர்பார்க்கவில்லை.

உடனே வெட்கம் போனது. குங்குமச் சிவப்பு முகம் வெளிறிப் போனது.

எப்போதும் வரும் பயம் வந்து ஒட்டிக் கொண்டது.

"அத்தை! ஆமாம் அத்தை! எனக்கே இரண்டு நாளா தலை சுத்தற மாதிரி இருந்தது. சரி... இவரைப் பத்தின கவலையில சரியாத் தூங்காததால இருக்கும்னு நினைச்சு... ஆனா இப்போ..."

"எத்தனை நாள்?"

"பத்து நாள் தள்ளிப் போயிருக்கு அத்தை!"

"இங்கே வா... கையைக் குடு."

மதியின் கைகளை வாங்கி மணிக்கட்டில் நாடி பிடித்துப் பார்த்தாள்.



அவள் காலத்தில் இப்போது உள்ளது போல... பொசுக்கென்றால் டாக்டரிடம் போகும் வழக்கமில்லையே...!

அதுவும் இவள் ஆத்தா... நாடி பிடித்துப் பார்த்தே வயிற்று வலி முதற்கொண்டு வாந்தி பேதி வரை கண்டு பிடித்து விடுவாள்.

நாடி பிடித்துப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே... சாரதாவின் முகம் மெல்ல மெல்ல மாறியது.

'அட ஆமாம்! என் மருமக மாசமாத்தான் இருக்கா. மருமகளே! சீக்கிரம் பேரனோ பேத்தியோ பெத்துக் குடு!' என்று குதூகலக் குரலில் சந்தோஷமாக வார்த்தைகளைத் தெறிக்க வேண்டிய வாய்... நிதானமாக வெறுப்பாக முணு முணுத்தது.

"இருக்கிறது பத்தாதுன்னு... இப்போ இது ஒண்ணுதான் பாக்கி!"

## 14

தன்னை அப்படியே தூக்கி... எரிகிற தீயில் போட்டது போலத் துடிதுடித்துப் போனாள் மதி.

எப்பேர்ப்பட்ட தருணம் இது! இந்த வீட்டின் ஒரே மருமகள். இந்தக் குடும்பத்தின் முதல் வாரிசைத் தன் வயிற்றில் சுமப்பதை அறிவிக்கும் நேரம்.

மாமியாராக... தன் மகனின் வாரிசு வரப் போவதைக் கேட்டவுடனே சந்தோஷித்து ஆசிர்வதிக்க வேண்டிய தருணம்.

இப்படி நெருப்பள்ளிக் கொட்டுகிறாளே... மாமியார்!

தன்னை மதிக்காது காதல் கல்யாணம் செய்து கொண்டார்கள் என ஒதுக்கி வைக்கப்படும் தம்பதியினரைக் கூட... அவர்கள் பெற்றோரோடு இணைத்து வைக்கக்கூடிய சக்தி வாய்ந்ததல்லவா அடுத்த தலைமுறையின் உதயம்.

இப்படி ஒரு முகச்சுழிப்பை எதிர்பார்க்காத மதியழகி பிரமை பிடித்தது போல் செய்வதறியாது நின்றிருக்க... முதலில் சுதாரித்துக் கொண்டவள் வனிதாதான்!

"என்னம்மா நீ...? அண்ணி எவ்வளவு ஆசையா இந்த விஷயத்தைச் சொல்ல வந்தாங்க... இப்படி அவங்களை வருத்தப்படுத்திறியே!"

"நான் என்ன தப்பா சொல்லிட்டேன்... மதி உண்டானா எனக்கு மட்டும் சந்தோஷமா இருக்காதா... என்ன! ஆனா... சந்தோஷப்படற நிலையிலேயா நான் இருக்கேன். இதோ நிக்கிறாளே... இவள் வயித்துல பொறக்கப் போற குழந்தைக்கு அப்பன் உயிரோட இருக்கானா இல்லை யான்னே தெரியலையே?"

"அத்தை!" – வீறிட்டாள் மதியழகி.

"அம்மா!" – வனிதா கோபமாக அதட்ட...

"அத்தை! அப்படியெல்லாம் உங்க வாயால சொல்லாதீங்க அத்தை! அவருக்கு ஒண்ணும் ஆகாது அவர் உயிரோடதான் இருக்கார்."

இடுங்கின கண்களால் வெறித்தாள் சாரதாமணி.

"உயிரோடதான் இருக்காரா? ஏது... அவனைப் பார்த்த மாதிரி பேசறே?"



"ஐயோ அத்தை! உங்களை மாதிரித்தானே நானும்... எனக்கு மட்டும் என்ன தெரியும்? ஆனா என் மனசு சொல்லுது... அவர் நல்லா எங்கேயோ ஒரு புறம் இருக்கார்... சீக்கிரம் கண்டிப்பா வந்துடுவார்."

"பிறந்த வீட்டுப் பெருமையை உடன்பிறந்தான் கிட்ட சொன்ன கதையா... என் பிள்ளையைப் பத்தி என்கிட்டயே வக்காலத்து வாங்கிறியா? எப்ப வருவான் முத்தையன்? நாம சேட்டு கிட்ட வாங்காத பேச்செல்லாம் வாங்கி... கடனுக்குப் பதில் சொல்ல முடியாம... இதோ நிக்கிறாளே இவளுக்கு ஒரு கல்யாணம்... காட்சி பண்ண முடியாம நொந்து ஊரை விட்டே போனதுக்கப்புறம் வருவானாமா? ஏதோ அவனைப் போய்க் கேட்டுக்கிட்டு வந்த மாதிரி சொல்றா... போடி!"

கடைசியில் 'போடி!' என்று மதியை நோக்கிக் கை வீசும் போது... தன்னை அடக்க முடியாமல் குமுறி அழ ஆரம்பித்தாள் சாரதா.

அத்தையின் மேலுள்ள கோபமெல்லாம் நொடியில் போய் விட... அவள் அருகில் மண்டியிட்டு அமர்ந்து சமாதானப்படுத்தத் துவங்கினாள் மதி.

என்றாலும்... வயிற்றுக் கரு... சிறிது நேரத்திற்கு முன் சந்தோஷப் பூப்பந்தாய்த் தெரிந்தது. இப்போது பாரமாய் உறுத்துவதைப் போல் இருந்தது.

இன்னும் போகப் போக எத்தனை பேச்சுகளை ஜீரணிக்க வேண்டியிருக்குமோ?

இத்தனைக்கு நடுவிலும் அவருக்கு இதைச் சொல்ல வேண்டுமே என்று மனசு பரபரத்தது.

# 15

ஏனோ நடுங்கும் கரங்களுடன்... தொலைபேசியை எடுத்து... அவரைத் தொடர்பு கொள்ள எண்களை அழுத்தினாள் மதி.

இதுவரை அவள் தொலைபேசியில் தொடர்பு கொண்டதில்லை. இருமுறை நேரிலேயே போய்ப் பார்த்து விட்டு வந்தாள்.

அதுவும் இனிமேல் இப்படி வராதே என்று அவரே சொல்லி விட்ட பிறகு இவளால் அதை மீற முடியவில்லை.

"நான்தான்... சொல்லு. அன்னைக்கு ஏதோ முக்கியமா..."

"அது அப்புறம் சொல்றேன். அதுக்கு முன்னாடி வேற ஒரு சந்தோஷமான விஷயம் சொல்லத்தான் ஃபோன் பண்ணினேன். அது என்ன சொல்லுங்க... பார்ப்போம்!"

"ம்... ஏதாவது ஜாக்பாட் அடித்ததா?"

"ம்ஹூம்... இல்லை. தோட்டத்துல என்ன பணம் காய்ச்சி மரமா வைச்சிருக்கோம். சரி... நானே சொல்லித் தொலைக்கிறேன். நான்... நான் அம்மா ஆகப் போறேன்."

தொலைபேசியில் இவள் முகம் தெரிவது போலக் கற்பனையில் வெட்கப்பட்டுக் கொண்டே திரும்பியவள்... சாரதாமணியைக் கண்டதும்... பேயறைந்தது போலானாள்.

'அத்தை கடைக்குப் போனவள்... அதற்குள் எப்படி? சட்டென வெட்கமாவது... ஒண்ணாவது?' – முகம் வெளிறிப் போனது.



சட்டெனத் தொலைபேசியை வைத்து விட்டு... இவள் உட்பக்கமாக நகர்ந்து விட... அத்தை கூப்பிட்டாள்.

"நான் வந்தா என்ன? நீ பேச வேண்டியதுதானே! யார் கிட்ட பேசிக்கிட்டிருந்தே?"

"நான் என் ஃபிரண்ட் கிட்டதான் பேசிக்கிட்டிருந்தேன். நான் பேசி முடிச்சிட்டுத்தான் வைச்சேன்."

மறுபடி தொலைபேசி கூப்பிட்டது. "இரு இரு... ஃபோனை எடுக்கிறேன்..." என்று அத்தை நாலடி எடுத்து வைக்கவும்... திடுக்கிட்டுப் போனாள் மதி.

தான் பாதி பேசிக் கொண்டிருக்கையிலேயே வைத்து விட்டதால்... அவர்தான் திரும்பத் தொலைபேசியில் கூப்பிடு கிறாரோ?

அத்தை எடுத்து விட்டால் ஆபத்தாயிற்றே! இந்த உறவு தெரிந்தால்... வெட்டிப் போடவும் தயங்க மாட்டாள் அத்தை.

என்ன செய்வதென்று மதி தவித்துக் கொண்டிருக்கும் போதே தொலைபேசியும் விடாமல் கத்திக் கொண்டிருந்தது.

வெளியில் போய் அலைந்து விட்டு வந்ததாலோ என்னவோ நாலடி எடுத்து வைக்கவே அத்தை தடுமாற... அவசரமாய்த் திரும்பினாள் மதி.

"இருங்க அத்தை! நான் என்ன ஏதுன்னு பார்க்கிறேன். அதுக்குள்ளே போன் அடிச்சு நின்னுடப் போகுது."

அதிரும் இதயத்துடன் தொலைபேசியை அதன் இருக்கையிலிருந்து எடுத்தாள் மதி.

அதற்குள் அந்தப்புறம் அழைப்பது யாராயிருந்தால் என்ன சொல்லலாம்? எப்படிப் பேசலாம் என்ற ஒத்திகை மனதிற்குள் நடந்து முடிந்தது.

"மதி! என்னம்மா எப்படி இருக்கே? மாப்பிள்ளை பற்றி ஏதாவது தெரிந்ததாம்மா?"

அண்ணன் பாரதியின் குரலைக் கேட்டதும் உள்ளுக்குள் ஏதோ உடைந்தது போலிருந்தது.

அண்ணனாக இருக்கக் கூடும் என்பதை எப்படி நினைக்காமல் போனேன்?

"ஏதோ இருக்கேண்ணா! அவரைப் பத்திதான் ஒண்ணுமே தெரியலைண்ணா... நீ கூட ஏதோ..."

"அது ஒண்ணும் பெரிய அளவில பிரயோசனப் படலைம்மா... எனக்குத் தெரிஞ்சவரு மாப்பிள்ளை ஆபீஸில் இருக்கார்னு சொன்னேனே... அவரு இப்ப அந்த வேலையில இல்லையாம். இந்த வேலையை விட்டுட்டு வேற வேலைக்குப் போய் ஆறு மாசம் ஆச்சாம். பணத்திற்கு ஏதாவது வழி செய்ய முடிஞ்சதாம்மா?"

கேட்கும்போதே பாரதிக்குக் குரல் கமறியது. கடன் கழுத்து மட்டும் இருக்கிறது. அதற்குப் பயந்து மாப்பிள்ளையும் ஓடி விட்டார் என்று தெரிந்தவுடனேயே... ஓடி வந்து, 'நான் இருக்கேன்ம்மா... கவலைப்படாதே!' என்று கடனாகவாவது ஏதாவது உதவி செய்திருக்க வேண்டும்.

ஆனால்... இப்படித் தொலைபேசியில் என்ன வழி செய்திருக்கிறாய் என்று கேட்கும் தன்னுடைய கையாலாகாத் தனத்தை எண்ணித் தன் மீதே கோபம் வந்தது பாரதிக்கு.



எல்லாம் தனக்கென்று வந்து வாய்த்த சகதர்மிணி சைதன்யாவால் வந்தது. சைதன்யா என்பதற்குப் பதிலாக 'சைத்தான்' என்று பெயர் வைத்திருக்கலாம். பொருத்தமாக இருந்திருக்கும்.

அவளுக்கு ஏற்கெனவே மதியைக் கண்டால் ஆகாது. தன்னையும் அவளையும் ஒப்பிட்டுப் பார்த்துப் பொறாமைப் படுவாள்.

அதிலும் மாப்பிள்ளை வேலைக்கும் போய்க் கொண்டு ரியல் எஸ்டேட் பிஸினஸிலும் முன்னுக்கு வந்து கொண்டிருக்க...

பொருமிக் கொண்டிருந்த முதல் ஆத்மா அவள்தான்.

பெற்றோரை இழந்த மதிக்குத் தாய்க்குத் தாயாய்... அண்ணிக்கு அண்ணியாய் இருக்க வேண்டியவள்.

ஹூம்.. இவள் கண் பட்டே இப்படிக் கடனாகி...

தங்கை குடும்பத்தில் எல்லாக் குழப்பங்களும் வந்திருக்கும்...

அண்ணனுக்குப் பதில் கூறுமுன்...

அத்தை எங்கே என்று எட்டிப் பார்த்தாள் மதி.

"ஹூம்... இதுக்கெல்லாம் ஒண்ணும் குறைச்சல் இல்லை. எப்படியும் சமாளிச்சுத்தானே ஆகணும்... அதுக் காக செத்துடவா போறோம்..." என்று முணுமுணுத்தவாறே அடுத்த அறைக்குப் போகும் அத்தை தெரிந்தாள்.

அண்ணனிடம் பேச்சைத் தொடர்ந்தாள் மதி.

# 16

"என்னம்மா! அண்ணன் காணாம போய் மூணு நாள் முழுசா ஆயிடுச்சு. அண்ணனைப் பற்றி ஒரு தகவலும் இல்லை. எங்கே இருந்தாலும் அண்ணன் உன்கூட இதுவரை பேசாத இருக்க தேம்மா... எனக்குப் பயமா இருக்கும்மா...!"

வனிதா சாரதாமணியிடம் சொல்லிக் கொண்டிருக்க மதி சமையலறையில் இருந்தாள்.

"என்னை என்னடி பண்ணச் சொல்றே? ஏதோ நீயு உன் அண்ணியும் சொன்னீங்களேன்னு போலீஸ்லகூட புகார் கொடுக்கலை... அவங்ககிட்ட சொல்லியிருந்தாக் கூட இந்நேரம் கண்டுபிடிச்சிருப்பாங்க.

"சேட்... அன்னிக்குக் கைநீட்டற அளவுக்கு போயிட்டான். சேட் வந்தப்ப... உங்கண்ணன் இருந்திரு தான்னா போலீஸ்ல சொல்லி லாக்கப்புக்குக் கொண் போயிருப்பான் சேட்...! கரெக்ட்தான். ஆனா... இப்ப நிர்கதியா ரெண்டு பொட்டைப் புள்ளைங்களையு என்னையும் விட்டுட்டு ஓடற அளவுக்கு என் மகன் கோழை இல்லையேடி!

"அப்படியா அவனை நான் வளர்த்து வைச்சிருக்கே இதுக்கு... அவன் ஒரு வார்த்தை சொல்லியிருந்தான்ன இந்த வீட்டை வித்து அந்த சேட் மூஞ்சியிலேயே விட்டெறிய சொல்லியிருப்பேனே...!

"புள்ளை எங்கே போனான்னே தெரியாம... சொந் வீட்டுல வாழவா ஆசைப்பட்டேன். அதுக்கு அவனே



குடிசையில கஞ்சியோ கூழோ குடிச்சிட்டு மானமா வாழ்ந் திருக்கலாமேடி!"

சாரதாமணி தன் ஒப்பாரியை நிறுத்துவது போலத் தெரியவில்லை.

வனிதாவுக்குத் தாயைப் பார்க்கப் பாவமாய் இருந்தது.

புலம்பி விட்டுப் போகட்டும். அப்படியாவது சோகம் வடியட்டும்.

ஆனாலும், வனிதாவிற்கு ஒரு சந்தேகம் இருக்கத் தான் செய்தது. அம்மா சொல்லும் போதெல்லாம் அண்ணிக்குப் பரிந்து பேசினாலும், 'ஏன்... அண்ணி இப்படி இறுகிப் போன முகத்துடன் எதுவுமே நடவாதது போல் நடந்து கொள்கிறாள். இப்போது கூட அம்மா அழுகிறாளே!

'ஏன் அத்தை அழறீங்க? அவருக்கு ஒண்ணும் ஆயிருக்காது. வந்துடுவாரு... நாங்க இருக்கோம்...' என்று ஆறுதலாக நான்கு வார்த்தைகள் சொன்னால் என்ன... குறைந்தா போய் விடுவாள்!'

இதுவரை எதையுமே... தோண்டித் துருவாது விகற்ப மில்லாது பார்க்கும் வனிதாவிற்குக் கூட இது கொஞ்சம் வினோதமாகப் பட்டது.

அண்ணன் காணாமல் போனதில் அண்ணிக்கு வருத்தமில்லையா! இல்லை... கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாது மறைக்கப் பார்க்கிறாளா? நேற்றுகூடப் படு ரகசியமாக... கதவை நன்றாகச் சாத்திவிட்டு ஜன்னல் புறமாக நின்று கொண்டு கைபேசியில் அண்ணி யாரிடமோ பேசிக் கொண்டிருந்தது நினைவிலாடியது.

'ச்சே! அண்ணியிடமா தப்பிருக்கும்?'

வீடு வீடாகவே இருக்கவில்லை. ஓய்வு நேரமெல்லாம் கைத் துணியை வைத்துக் கொண்டு... தூசு தட்டி, பெருக்கி... வீட்டைப் படு நேர்த்தியாக வைத்திருக்கும் அம்மா... ஓய்ந்து போய் ஓரமாக உட்கார்ந்து விட்ட பிறகு... வீட்டின் நிலைமையும் அம்மாவின் மனதைப் பிரதிபலிப்பதாக இருந்தது.

மேலும் எதையோ சொல்ல வாயெடுப்பதற்குள் தொலைபேசி முணுமுணுத்தது.

"ஹலோ!"

"ஆமா சார்! முத்தையன் வீடுதான். நீங்க..."

"............"

கேட்டதும் குரலில் பவ்யம் கூடியது வனிதாவிற்கு. "ஆமா சார்! நான் அவருடைய சிஸ்டர் பேசறேன். அண்ணன்..." - சற்று திக்கித் திணறிவிட்டு, "வெளியே போயிருக்கார் சார்!"

".........."

"அப்படியா சார்! என்ன சொல்றீங்க...? அண்ணன்... நாங்க உடனே வர்றோம் சார். இப்போ எங்கே...?"

வார்த்தைகள் கோவையாய் வராமல் திக்கித் திணறிய வனிதா தொலைபேசியை விட்டெறிந்து விட்டு... அம்மாவை ஓடிச் சென்று கட்டிக் கொண்டாள்.

"அம்மா! அண்ணன் நம்மை விட்டுட்டுப் போயிட்டானாம் அம்மா... போலீஸ்ல போன் பண்ணினாங்க...."



"என்னடி! என்ன சொல்றே? உன் அண்ணன்... அவன் காணாமப் போய்... மூணு நாளேச்சுடி. உளறாம... என்னன்னு சொல்லு..."

"அண்ணி... அண்ணி..."

வனிதாவின் அலறலால் பதற்றப்பட்டு... வேலையைப் பாதியிலேயே விட்டு விட்டு... ஹாலுக்கு விரைந்தாள் மதி.

"அம்மா... அண்ணி! பைக்கும் காரும் மோதி பைக்ல போன அண்ணன்... ஸ்பாட்டுலயே..."

"............"

"அம்மா... முகமெல்லாம் சக்கரத்துல மாட்டி அடையாளமே தெரியலையாம். சட்டைப் பையில விசிட்டிங் கார்டு பார்த்து... அண்ணன்தான்னு...

"அண்ணி! உடனே புறப்பட்டு அரசாங்க மருத்துவ மனைக்கு வரச் சொல்றாங்கண்ணி!" - அழுது கொண்டே சொல்லி முடித்தாள் வனிதா.

## 17

அடுத்த பத்தாவது நிமிஷம்... சாரதாவும் வனிதாவும் வாசலுக்கு வந்து விட்டிருந்தனர்.

"கூப்பிடுடி உன் அண்ணியை! நமக்கு முன்னாடி அவ என்னவோ... ஏதோவென்று புறப்பட்டிருக்க வேண்டாமா? என்ன பெண் இவள்? எல்லாம்..."

அம்மா ஆரம்பிக்க... வனிதா கையமர்த்தினாள்.

"இரு... நீ ஆரம்பிக்காதே. அண்ணி பாவம்! இந்தச் செய்தியை அவங்க ஜீரணிக்க முடியறதே கஷ்டம். நீ அந்த ஆட்டோவைக் கூப்பிடு. நான் அண்ணியைக் கூட்டிட்டு வர்றேன்."

"அண்ணி... அண்ணி... இன்னமும் என்ன நீங்க..." - கூப்பிட்டுக் கொண்டே போன வனிதா துணுக்குற்றாள்.

ஜன்னலோரம் அண்ணி இந்நேரம் யாருக்கு ஃபோன் செய்கிறாள்... பேசுகிறாள்...?

அண்ணன்... எங்கு தலைமறைவாய் இருந்தானோ... யாருடைய வண்டியை எடுத்துக் கொண்டு எங்கே போனானோ? ஆக்ஸிடெண்ட்ல ஸ்பாட்லயே மரணம் என்றதும்... அலறியடித்துக் கொண்டு கதறிக் கொண்டு... ஆட்டோ பிடித்திருக்க வேண்டாமோ!

தங்கை தன்னுடைய தவிப்புகூட... அண்ணியிடம் காணோமே!

அழுது கொண்டே உள்ளே ஓடியவள் யாருக்கு ஃபோன் செய்கிறாள்?

மதி நடுங்கும் விரல்களுடன்... எண்களை செல்லில் ஒற்றிக் கொண்டிருந்தாள். அவருடன் பேசியாக வேண்டுமே!

"நான்தான்..."

".........."

"என்னது அவர் வெளியே போயிருக்கிறாரா? கடவுளே! நல்லாத் தெரியுமா! என்ன அப்பவேவா..." - சன்னமாகப் பேசிக் கொண்டிருந்தவள்... வனிதாவின் உருவத்தை வாயிற்படியில் உணர்ந்ததும்... அவசரமாய்...



"அப்புறம் பேசறேன்..." என்று அணைத்து விட்டுத் துளிர்த்த வியர்வையை... புடவைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டே வெளிப்பட்டாள்.

"இதோ வந்துட்டேன்... வனிதா! அதுக்குள்ள செல்லுக்கு யாராவது போன் பண்ணினா... அதனால அதைக் கையோட எடுத்துட்டுப் போயிடலாமேன்னு... எடுக்க வந்தேன்."

'ஏன் அண்ணி... தேவையில்லாம பொய் சொல் றீங்க?' என்று கேட்க வந்தவள்... விரக்தியாய் எங்கோ பார்வையைப் போட்டவாறு கூறினாள். "அதுதான்... யார் கிட்டயிருந்து ஃபோன் வரும்னு இந்த மூணு நாளா எதிர்பார்த்துக்கிட்டிருந்தீங்களோ... அவனே அங்கே ஒரே யடியா போயிட்டான்... ஹூம்... நான் எங்கண்ணனைச் சொன்னேன்..."

வனிதாவை மேற்கொண்டு பேச விடாமல்... சாரதாவின் குரல் வாசலிலிருந்து கூப்பிட்டது.

இருவரும் விரைந்தனர்.

ஆட்டோவில்...

"பாவிப் பயல்! இப்படிப் பண்ணிட்டானே... எங்கே இருந்தாலும் தப்பான முடிவுக்குப் போக மாட்டேன்ம்மா... பணத்தோட கூடிய சீக்கிரம் வந்துடுவேன்னு கடிதம் எழுதி வைச்சுட்டுப் போனவன்... இப்படி... விதி தானா வந்து கூப்பிட்டுக்கிடுச்சே..."

"அண்ணன்... ஃபிரண்ட் யார்கிட்டேயாவது வண்டியை வாங்கிட்டுப் போயிருக்குமோ... ஐயோ! அண்ணனை நான் எப்படி... தலையெல்லாம் நசுங்கிப் பார்ப்பேன்..."

"அத்தை! நான் இப்படி நடக்கும்னு கனவுலேயும் நினைக்கலையே அத்தை... இப்படி நடக்கும்னு தெரிஞ்சிருந்தா... ஒத்துக்காம அவரை எப்படியாவது தடுத்திருப்பேனே... அத்தை!"

"என்னத்தைத் தடுத்திருப்பீங்க... அண்ணி!" வனிதாவின் கேள்விக்கு முழித்தாள் மதி.

"விடும்மா... நீ மட்டும் என்ன செய்வே? அவன் உன்கிட்ட சொல்லிட்டா ஓடிப் போனான்? ஏதோ... அவன் எங்கே இருந்தாலும் நல்லா இருக்கணும். ஒரு நாள் இல்லேன்னா ஒருநாள்... 'அம்மா...'ன்னு வந்து நிப்பான்னு என்னை நானே சமாதானப்படுத்திண்டு நடமாடிக்கிட்டு இருந்தேனே... இப்படி மோசம் பண்ணிட்டானே...!"

அதற்குள் மருத்துவமனை வந்து விட்டிருந்தது.

வனிதாவும் அம்மாவும் முன் செல்ல...

மதி அவர்களைத் தொடர்ந்தாள்.

'என்னை இப்படி ஏமாத்திட்டுப் போயிட்டீங்களே! இதுக்கா இவ்வளவு நாள் காத்திட்டிருந்தேன். ஓடிப் போகாம இருந்திருந்தாக் கூட... சேட் புகார் கொடுத்தா ஜெயில்ல தானே போடுவாங்க. உசிருக்கு ஆபத்து ஒண்ணும் வந்திருக்காதே...

'இப்போ உயிரில்லாத கோலத்துல... உங்களை நான் எப்படிப் பார்க்கப் போறேன்?' - மனதிற்குள் மறுகியவாறே புடவைத் தலைப்பால் வாய் வரை வந்து விட்ட அழுகையை அடக்கியவாறே அவர்களைப் பின்தொடர்ந்தாள் மதி.



## 18

இவர்களுக்கு ஃபோன் செய்த காவல் அதிகாரி... இவர்களை அழைத்துக் கொண்டு போனார்.

அவர் அடுக்கிய கேள்விகளுக்குப் பதில் சொல்லும் நிலையில்... மூவருமே இல்லை என்பதால் மேற்கொண்டு கேட்கும் எண்ணத்தைக் கைவிட்டார்.

வெள்ளை விரிப்பை விலக்கும் வரை... பெரிய அழுகைக்கு ஆயத்தமாகி விட்டிருந்த... மூவருக்குமே வெள்ளை விரிப்பை முழுமையாக அகற்றியபோது... குபீரென்ற ஓர் அதிர்ச்சி தாக்கியது.

வந்த அழுகை சட்டென வடிந்தது.

"இது... இது...."

"இது... என் பையன் முத்தையன் இல்லை... என் ராசா முத்தையன் இல்லை..."

முத்தையனின் உடலைக் காணும் தைரியம் இல்லாமல்... இடுங்கிய கண்களுடன் வெறித்த மதி... அத்தையின் வார்த்தைகளைக் கேட்டு... முழுதாய்க் கண்களை விரித்துப் பார்த்தாள். இன்ப அதிர்ச்சி!

"ஆம்... இது அவர் இல்லை. கறுத்த குட்டையான... சற்றுத் தடியான கோரமான விரல்களுடனும்... இந்த உடல் எங்கே... பளீரென்று வெள்ளையாக உயரமாக... அழகான விரல்களுடன் அவர் உருவம் எங்கே?"

ஒரு தற்காலிக நிம்மதி... மூவருக்குள்ளும் பரவியது.

"நல்லாப் பாருங்க... இவர்..."

"அதான் சொல்றேனில்ல... இன்ஸ்பெக்டர்! இது என் பையன் இல்லை."

"இது உங்க பையனோட...!"

"ஆமா... அவனோட விசிட்டிங் கார்டுதான். ரொம்ப சிலருக்கு மட்டும்தான் இதைக் கொடுத்திருப்பான்..."

"என்னம்மா! ஃபோன் பண்ணினப்ப நீதானே பேசினே. அண்ணன் வெளியே போயிருக்காரு... காணோம்னு சொன்னே. இந்த எண் பைக் உங்க அண்ணனோடதா?"

'ஙே' என விழித்தாள் வனிதா.

அண்ணன் அவன் நண்பன் யாரிடமாவது வண்டி வாங்கிக் கொண்டு போயிருப்பான் என்றல்லவா நினைத் திருந்தனர்.

ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பது போல... அண்ணன் காணாமல் போனதும் எல்லாம் பொருந்தி விட்டல்லவா இருந்தது.

"சார்! நான் உங்ககிட்ட எல்லா உண்மையையும் சொல்லிடறேன்..." – சாரதாமணி பீடிகையுடன் ஆரம்பித்த போது...

"என்னங்க... என்னை விட்டுட்டுப் போயிட்டீங்களே...!" – ஓவெனக் கதறியவாறே... அப்பெண்... அச்சடலத்தின் மீது வந்து கத்தியவாறே விழ...

கூட வந்தவர்கள் அவளைத் தாங்கிப் பிடித்தனர்.



"என்னம்மா... இது? யார் நீ? என்ன கான்ஸ்டபிள்... இதெல்லாம்?"

"சார்! அங்கே சிக்னலாண்ட அடிபட்டது இந்தம்மா வோட புருஷன்... சார்! வண்டியும் அவரோடதுதான். நாம ஆம்புலன்ஸ்ல... பாடி ஏத்தும்போது... இந்தம்மாவோட வீட்டுக்காரருக்குத் தெரிஞ்சவரு பார்த்துட்டுப் போய்த் தகவல் சொல்லிக் கூப்பிட்டுட்டு வந்திருக்காரு..."

"அய்யோ... நான் என்ன செய்வேன்? பொண்ணு நிச்சயத்திற்குப் பூ, பழம் எல்லாம் வாங்கிட்டு வந்துடறேன்னு கிளம்பின மனுஷன்... இப்படி என் பூவைப் பறிச்சிட்டுப் போயிட்டானே...

"அங்கே... அப்பா நிச்சயதார்த்த மாலை வாங்கிட்டு வருவாருன்னு... வாசல்லயே காத்திருக்குமேய்யா நம்ம பொண்ணு... அதுக்கு என்ன பதில் சொல்வேன்?"

தன் கணவனின் உடலைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து ஒவ்வொன்றாகச் சொல்லிக் கதறிக் கொண் டிருந்தாள் அப்பெண்.

அதை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தனர் மதி, வனிதா... அவள் அம்மா... மூவரும்!

கொஞ்சம்... அந்தப் பெண் நிதானத்திற்கு வந்ததும்... கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"இந்த விசிட்டிங் கார்டு. எப்படி இவரோட சட்டையில வந்தது? இதைப் பாருங்க..."

விசிட்டிங் கார்டைப் பார்த்து விட்டுப் பதைபதைத்தாள்.

"இந்தப் படுபாவியோட... விசிட்டிங் கார்டா! இவனால தாங்க... என்னோட குடும்பமே நடுத் தெருவிற்கு வந்துச்சு... இவனைப் பார்த்து... நல்லா நாலு வார்த்தை கேட்டுட்டுத் தான் வீட்டுக்கு வருவேன்னு சொல்லிண்டேதான் போனார். அந்த வேகத்துல போய்த்தான் ஆக்ஸிடெண்ட் ஆகியிருக் கணும்..."

அவர்கள் மூவரையும் அடையாளம் தெரியாமல் முத்தையனைப் பற்றி விமரிசித்துக் கொண்டிருந்தாள் அவள்.

"கொஞ்சம்... நிதானமா சொல்லும்மா! இவரை உங்களுக்குத் தெரியுமா? உங்க வீட்டுக்காரர் பேரென்ன?"

மூக்கைப் புடவைத் தலைப்பால் சிந்திக் கொண்டே அழுகையோடு சொன்னாள்.

"என் வீட்டுக்காரர் பேர் சுதாகருங்க சார்! இதோ இந்த விசிட்டிங் கார்டுல இருக்கிறவர்கிட்ட வீடு கட்ட லட்ச ரூபாய் அட்வான்ஸ் கொடுத்திருந்தார். ஆனா வீடும் முடியலை... ஒண்ணும் முடியலைன்னு புலம்பிக் கொண்டே இருப்பார்.

"மாலை வாங்கிட்டு வரும்போது... அப்படியே போய் அந்தாளையும் பார்த்துட்டு வர்றதா சொல்லிட்டுத்தான் போனார். இனி... யாரைக் கேட்டு என்ன செய்ய? இராசா... நீயே போயிட்டியே..."

அடுத்த அழுகைக்கு ஆயத்தமானாள், அப்பெண்.

மதியழகியும் அவள் நாத்தனாரும் அத்தையும் வந்து பார்த்து விட்டு... அது முத்தையன் இல்லை என்று சொன்னதுமே...



இன்ஸ்பெக்டர், 'இது தேறாது. இந்தக் கேஸ் நம்மை ரொம்பவும் வேலை வாங்கப் போகிறது!' என்று சலிப்போடு நினைத்துக் கொண்டார்.

## 19

சட்டையில் இருந்த விசிட்டிங் கார்டு பார்த்து விட்டுக் கூப்பிட்டால்... இது அவன் இல்லை... திரும்ப ஆரம்பத்திலிருந்து வர வேண்டுமே...

நினைத்திருக்கும் போதே இறந்த வனுடைய மனைவி வந்து சேரவும்...

இந்தக் கேஸ் ஒரு முடிவுக்கு வந்து விட்ட ஒரு நிம்மதி அவருள் தோன்றியது.

இருந்தாலும்... அவர் நினைக்காமலில்லை. விசிட்டிங் கார்டு பார்த்து ஃபோன் செய்ததுமே... அந்தப் பெண் மதி... அவள் மாமியாரைக் கூட்டிக் கொண்டு பொசுக்கென்று வந்து விட்டதே...

வண்டி நம்பர் கேட்டால்... சரியான பதில் இல்லாமல் திருதிருவென விழிக்கிறது.

இவள் புருஷன்... வெளியில் சென்றவன் இன்னமும் வரவில்லையோ...

இந்த அம்மா வேறு... ஏதோ வீடு... அட்வான்ஸ் என்று சொல்லியதே... விசாரிக்க வேண்டும்...!

மதியின் நல்ல நேரம் என்றுதான் சொல்ல வேண்டும். இவளை நோக்கி வந்த இன்ஸ்பெக்டரை அவசரமாக செல்லில் கூப்பிட்டார் ஏ.ஸி.

இவளை இத்தோடு மறந்து போய்... "எஸ் ஸார்! இதோ வர்றேன் ஸார்..." என்று கடமை அழைக்க, அவர் பறந்து விட்டார்.

மூவரும் நிம்மதி மூச்சோடு வெளியே வந்தனர்.

கணவனை இழந்து அரற்றிய அப்பெண்ணின் விமர்சனம்... மூவருள்ளும் கனமான அமைதியை ஏற்றியிருந்தது. மூவரும் அது பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாலும்... ஏனோ.. வாய் விட்டுச் சொல்ல மூவருக்குமே முடியவில்லை.

ஒன்று புரிந்தது. இப்போது... முத்தையன் இல்லாமல்... சேட்டை மட்டும் சமாளித்தால் போதாது. இது மாதிரி... வீடு கட்ட புக் பண்ணியவர்களிடம் அட்வான்ஸ் வேறு வாங்கியிருக்கிறானே... அவர்கள் வந்து நிற்பார்களே...

இனி எத்தனை பேர் இப்படி விசிட்டிங் கார்டுடன் வந்து நிற்கப் போகிறார்களோ...?

இந்தப் பெண் மதியழகி எத்தனை பேருக்குப் பதில் சொல்வாள்? முதன் முறையாக... மாமியார் மருமகளுக்காகப் பரிதாபப்பட்டாள். கூடவே... தனி மரமாய் நிற்கும் வனிதா பற்றி கவலை வந்தது.

சென்ற வாரம் முத்தையனிடம் தரகர் கொடுத்து விட்டுச் சென்ற வரனைப் பற்றிப் பேசும்போது... அவன் விட்டேத்தியாய்ப் பேசிய போது... அன்று தோன்றாதது இன்று தோன்றியது. ஏதோ மனசில் வைத்துக் கொண்டுதான் அப்படி இருந்தானோ... கண்களில் நீர் கட்டியது.

'என் மகளுக்குக் கல்யாணம் என்ற ஒன்று நடக்குமா?



# 20

மனமும் உள்ளமும் தடுமாற்றத்தில் இருந்த சாரதாமணியை... ஒருவாறாகச் சமாளித்து ஆட்டோவில் ஏற்றினர் வனிதாவும் மதியழகியும்.

"நல்லவேளை... வனிதா! அத்தை அந்த இன்ஸ்பெக்டரிடம் அவரைக் காணோம்னு சொல்லவில்லை. இல்லையென்றால்... அது வேறு வேற பிரச்சினையாய் முளைத்திருக்கும்..."

"தப்பா சொல்றீங்க அண்ணி! நம் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்திருக்கும். அண்ணனைத் தேடற முயற்சியை அந்த இன்ஸ்பெக்டர் செய்திருப்பாரு... நாம நம்மாலான எல்லா வழியிலேயும் பார்த்துட்டோம். அண்ணன் இருக்கிற திசையாவது தெரிஞ்சுதா?"

"எல்லாம்... உன் எதிர்காலத்தை மனசுல வைச்சுண்டுதான் அப்படிச் சொன்னேன்... வனிதா! அப்படி போலீஸ் உன் அண்ணனைக் கண்டுபிடிச்சுக் கொடுத்தா... உன்னை விட எனக்குச் சந்தோஷம் இல்லையா!" - அவளே தொடர்ந்தாள்.

"அவர் போன பிறகு... எனக்குன்னு வாழ்க்கையில் என்ன இருக்கு? ஆனா... அவங்க கண்டுபிடிக்கிறாங்களோ இல்லையோ... கொட்டை எழுத்துல பேப்பர்ல... 'கடன் தொல்லையால் தலைமறைவு!'ன்னு போட்டாங்கன்னா... இப்ப சேட் மட்டும்தான்... வீட்டுப் படியேறி மானத்தை வாங்கறாரு... இது மாதிரி எத்தனை பேர் வந்து நிற்பாங்களோ?"

"என்னதான் நீங்க சொல்லுங்க... எனக்கு என்னமோ... இப்படி இந்த விஷயத்தைக் கமுக்கமா வைச்சுக்கிறது சரின்னு படலை. இப்ப மட்டும் என்ன... அண்ணன் வரவே இல்லைன்னா... எத்தனை நாள்தான்... இப்படி ஓட்ட முடியும்?"

"அப்படியெல்லாம் உன் வாயால சொல்லாதே... வனிதா! உன் அண்ணன் கூடிய சீக்கிரமே வந்துடுவாரு."

"எங்கே இருந்து...?"

விக்கித்துப் போய்த் தன் நாத்தனாரைப் பார்த்தாள் மதி. இதற்கு மேலும் அவளுக்குப் பதிலுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருப்பது... முட்டாள்தனம் என்று தோன்றவே... அத்துடன் அதைக் கைவிட்டு விட்டு... வெளியில் கவனத்தைத் திருப்பினாள்.

முன்பெல்லாம் 'அண்ணி... அண்ணி...' என்று ஆசையாய் அழைத்து வாஞ்சையுடன் வளைய வந்து கொண்டிருந்த வனிதாவோ... இப்போது நிறம் மாறி விட்டதைப் போல் உணர்ந்தாள் மதியழகி.

வனிதா... தன்னைச் சந்தேகப்படுகிறாளோ... தன் அண்ணன் வீட்டை விட்டுக் காணாமல் போனதில் தனக்கு வருத்தமில்லை என்று நினைக்கிறாளோ!

எப்படி வருத்தமில்லாமல் இருக்கும்... முத்தையனுக்காக எத்தனை வேதனைகளையும் அவமானங்களையும் கூடத் தாங்கிக் கொள்வாள் மதி. ஆனால் அவரே இல்லாமல்... அதனால் வரும் வேதனைகளை... எப்படி எதிர்கொள்வாள்?



திடீரென... சட்டென பிரேக் போட்டு ஆட்டோ நின்றதும்தான்... மதி தன் நினைவிற்கு வந்தாள்.

ஆனால் கனவிலேயே இருந்திருக்கலாமோ... என்று நினைக்கும் அளவுக்கு நிஜம் அவளைப் பயமுறுத்தியது.

வாசலில் சேட் நின்றிருந்தார்.

"என்னம்மா! என் பணத்தைக் கொடுக்க என்ன ஏற்பாடு பண்ணியிருக்கீங்க? குடுக்கணும்ங்கிற எண்ணமாவது மனசுல இருக்கா?"

"யோவ் சேட்டு... இந்தா! நாங்க ஒண்ணும் உன் பணத்தை ஏமாத்திட மாட்டோம். உன் பணத்தைத் தூக்கிட்டு நாங்க ஒண்ணும் ஓடிடப் போறதில்லை. என்ன... இரண்டே நாள் பொறுத்துக்கோ. உன் முகத்துலயே பணத்தை வீசிடறேன்..."

ரோஷத்தில் சாரதாமணி... வாய்க்கு வந்த வாக்குறுதியைக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"ஏன்... இன்னும் இரண்டு நாள்ல நீங்களும் வீட்டை விட்டுப் போயிடலாம்னு இருக்கீங்களா? அதான் உன் பையன்... முதல்ல வீட்டை விட்டு, பொட்டைப் புள்ளைங்களை விட்டுட்டு ஓடிட்டான்..."

"யோவ்... என்னய்யா! விட்டாப் பேசிக்கிட்டே போறே? என் பையன் பண விஷயமா பார்த்துப் பேசிட்டு வரச் சொந்தக்காரங்க வீட்டுக்குப் போயிருக்கான். இன்னும் ரெண்டு நாள்ல வந்துடுவான்..."

"அப்படின்னு நீங்க சொல்லிக்கிட்டிரும்மா. ஊரெல்லாம் என்ன பேசுறாங்க தெரியுமா? கடன் வாங்கிட்டுத் திருப்பிக்

கொடுக்க வழியில்லாம புள்ளை ஓடிட்டான். சரி... உன்கிட்ட நமக்குப் பேச்சு வேண்டாம். இதோ இந்தப் புள்ளை சொல்லட்டும். சேட் போயிடறேன்..." - சொல்லிக் கொண்டே மதியைக் கை காட்டினான் சேட்.

வயசான... இந்த அம்மாவிடம் ஏதும் தேறாது. இந்தப் பெண்ணும் கல்யாணமாகாம வீட்டோட இருக்கு. அது என்ன பண்ணும்? முத்தையன் வீட்டுக்காரி வேலைக்குப் போகும் பெண். அதுதான் புரட்டித் தர முடியும்... என்ற எண்ணத்தில் கேட்டான் சேட்.

பிலுபிலுவெனப் பிடித்துக் கொண்டாள் சாரதா.

"அதுங்கிட்ட என்ன சேட்... பேச்சு! நான் சொல்றேன்ல... இன்னும் இரண்டே நாள்... வந்து நில்லு. உன் பணத்தை செட்டில் செய்யறேனா... இல்லையா பாரு... இல்லைன்னா இந்த சாரதா தூக்குல தொங்கி யிருப்பேன்... கருமாதிக்கு வந்துட்டுப் போ."

"ஹே... ராம்! என்ன இந்தப் பொம்பளை இந்தப் பேச்சுப் பேசுது... நான் அப்புறம் வர்றேன்."

மதி வேறு வழியில்லாது தலையிட வேண்டிய தாயிற்று.

"பயப்படாதீங்க சேட்! உங்க பணம் கட்டாயம் திருப்பிடுவோம்... இப்போ நீங்க கிளம்புங்க."

"வரேன்ம்மா...!" - பொதுவாகக் கூறிவிட்டுச் சேட் சென்று விட...

மூவரும் உள்ளே நுழைந்தனர்.



நல்லவேளை! அக்கம்பக்கத்து வீடுகளில் இதுவரை மனிதத் தலைகள் முளைக்கவில்லை.

'என்ன செய்யப் போகிறோம்?' என்ற கேள்வி மதி மனதில் விசுவரூபம் எடுத்தது.

## 21

லேசாகத் தலை சுற்ற ஆரம்பிக்கவும்தான் வயிற்றுப் பிள்ளை ஞாபகம் வந்தது. எந்த நேரத்தில் வந்துதித்ததோ... அத்தை சொன்ன மாதிரி ஏகப்பட்ட கஷ்டங்கள்!

கூட இருந்து... சந்தோஷப்பட்டு... உச்சி முகர்ந்து சந்தோஷப்படுத்திப் பார்க்க வேண்டிய அவரோ... எங்கோ...?

என்னதான் இப்படியெல்லாம் சிந்தித்தாலும் வயிற்றில் தோன்றிய அவஸ்தையான உணர்வு... நரம்புகளில் கலந்து ஒரு புரியாத சந்தோஷத்தைத் தருவதை உணர்ந்தாள், மதி.

இடிந்து போய்ச் சாரதாமணி உட்கார்ந்து விட... வனிதா உள்ளே போய்விட... மதி அவசரமாக ஓடிப் போய்... ஒலிக்கும் கைபேசியை எடுத்து... அதை அழுத்தினாள்.

ஓடி வந்து எதிர்பார்த்தது போலவே... அவர்தான் அழைத்தது...

இது தப்பு என்று தெரிந்தாலும்... அத்தைக்குத் தெரிந்தால்... அதன் விளைவு எவ்வளவு விபரீதமாக இருக்கும் என ஊகிக்க முடிந்தாலும்... மனம் அவரது குரலைக் கேட்க அல்லவா... ஆவலாக ஓடுகிறது.

"நான்தான்..."

"சொல்லுங்க!" – மெல்லிய குரலில் யாருக்கும் கேட்கா வண்ணம் பேசினாள் மதி.

"நான் உன்னைப் பார்க்கணுமே மதி!"

"நான் எப்படி... இன்று அதுவும் ஞாயிறு. அத்தை வேறு ஏற்கெனவே..."

"என்ன செய்வியோ... என்ன பொய் சொல்வியோ... நீ இன்னிக்கு இங்கே வரணும்."

மனம் உடனே போய் அவரைப் போய்ப் பார்க்க விழைந்ததாலோ என்னவோ... சடாரென எந்தப் பொய்யும் கைகொடுக்கவில்லை.

"சரி... அத்தை வர்றாங்க போலிருக்கு. நான் வைச்சுடறேன்..." – கைபேசியை அணைத்தாள்.

என்ன சொல்வது அத்தையிடம்? அத்தை மோப்பம் பிடித்து... மாட்டிக் கொண்டால்... அவ்வளவுதான்!

அதிலும்... முத்தையனை நினைத்தால்தான் அவளுக்கு இன்னும் பயம் அதிகமாயிற்று.

நல்லவேளை! ஆபத்பாந்தவளாக... வந்து கை கொடுத்தாள் வனிதா.

"அண்ணி! பணத்துக்கு என்ன செய்யப் போறீங்க?"

புடவையில் கையைத் துடைத்துக் கொண்டே... கிழக்கும் மேற்குமாக நடந்து கொண்டிருந்த... மதியிடம் கேட்டாள் வனிதா.

ஒரு நிமிஷம் மதிக்குக் கோபம் தலைக்கேறியது.



ஏதோ... தனிப்பட்ட விதத்தில்... தான் கடன் வாங்கி விட்டு முழிப்பது போலவும்... தான் மட்டுமே அதற்கு ஜவாப்தாரி என்பது போலவும்... 'என்ன செய்யப் போறீங்களாம்?' – மனதிற்குள் பொருமியவள் மௌனம் காக்க...

"ஏன் அண்ணி... பேசாம அந்த ஃபிளாட்... அதுல பாதி வரைக்கும் கட்டின கட்டடத்தோட யாராவது இன்ஜினியருக்கு வித்துட்டு... அந்தப் பணத்தை வாங்கி அந்த சேட்டுகிட்ட..."

"இல்ல வனிதா! அந்தக் கட்டடமெல்லாம் பார்த்துப் பார்த்து ப்ளான் போட்டு உங்க அண்ணன் ஆரம்பிச்சது... அவர் எப்படியும் ஏதாவது ஒரு வகையில் பணம் திரட்டத் தான் போயிருப்பார். பணம் கிடைச்சதும் கண்டிப்பா கூடிய சீக்கிரம் வந்துடுவார்ன்னு என் உள் மனசுல தோணுது..."

சட்டென மதிக்கு அந்த யோசனை தோன்றியது. "வனிதா! அன்னிக்கு எங்க எம்.டி.கிட்ட பர்சனல் லோன் விஷயமா கேட்கிறேன்னு போனேன் இல்லையா...!"

"ஆமா. அவர்தான் ஊரில இல்லைன்னு கை விரிச்சிட்டீங்களே...!"

"அது அன்னிக்கு..."

"ஏன், இன்னிக்கு...?"

"அவர் நேற்றே ஊரிலிருந்து வந்திருப்பார். போய்க் கேட்டா... லோன் சாங்க்ஷன் ஆக வாய்ப்பிருக்கு..."

"இன்னிக்கா... இன்று சன்டே அண்ணி!"

"எனக்குத் தெரியாதா என்ன? எங்க எம்.டி. கண்டிப்பா இன்று ஆபீஸ் வந்து ஃபைல் பார்ப்பாரு. கொஞ்சம் ரிலாக்ஸ்டாக... டென்ஷனில்லாம இருக்கும்போது போய்க் கேட்கலாமா என்று பார்க்கிறேன்..."

"அது சரிப்படுமா அண்ணி... காலம் கெட்டுக் கிடக்கு. நீங்க அவர் தனியா இருக்கிறச்சே..."

"என்ன வனிதா நீ...! எம்.டி. மட்டும் தனியா கதவைத் திறந்து வைச்சுண்டு வேலை பார்ப்பார்ன்னு நெனைச்சியா! ஜி.எம்., ஏ.எம்.ன்னு அவங்க எல்லாம் வர மாட்டாங்களா... எம்.டிகிட்ட நல்ல பெயர் வாங்கவே... ஊழியர்கள் சிலர்.. சன்டே அன்று வந்து வேலை பார்ப்பாங்க... தெரியுமா! அதெல்லாம் ஒரு பயமும் இல்லை...

"போய்க் கேட்டா... லோன் கிடைக்க வாய்ப்பிருக்கு. கொஞ்சம் கொஞ்சமா... மாசச் சம்பளத்துல அடைச்சிடலாம்."

"ஏன் அப்புறம் யோசிக்கிறீங்க?"

"அத்தைகிட்ட போய்க் கேட்கவே யோசனையா இருக்கு. என்ன சொல்வாங்களோ?"

"அதுதானா உங்க கவலை! அம்மாகிட்ட நான் பேசறேன்... வாங்க."

ஏதோ ஒரு வேகத்தில்... சேட்டிடம் வாக்குக் கொடுத்து விட்டு... என்ன செய்வதென்று யோசனையாய் இருந்த... சாரதாமணி... பணம் கிடைக்க ஒரு வழியாய்... வனிதா யோசனை சொல்ல... மறுப்பின்றிச் சம்மதித்தாள்.

ஆவலும் பயமும் ஒருசேர மனதை ஆக்கிரமிக்க... வீட்டை விட்டுப் புறப்பட்டாள் மதியழகி.



## 22

அத்தையிடம் பொய் சொல்லி விட்டாவது அவரைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று கிளம்பியவள்.. சடுதியில் அந்த யோசனை தோன்றவே... சற்று நிதானித்தாள்.

அப்படிச் செய்யலாமா? வனிதாவிடம் ஏற்கெனவே அவள் சொல்லியது போல... ஞாயிறு என்றாலும் எம்.டி.யும் சரி... மற்ற சில ஊழியர்களும் சரி... வருவது வழக்கம்.

அதே போல்... அவளும் அலுவலகத்தில் பர்சனல் லோன் கேட்டு எம்.டி. பார்வைக்கு லெட்டர் கொடுத்திருந்தாள்.

அது சாங்க்ஷன் ஆனால் கூடப் போதும். ஒரு லட்சம் ரூபாய் அட்வான்ஸ் கேட்டிருக்கிறாள்.

ஒரு லட்சம் கிடைத்தால் கூடப் போதும். அதை முதலில் சேட்டிடம் கொடுத்து... கொஞ்சம் டயம் கேட்கலாம்.

எதற்கும் அலுவலகம் போய்ப் பார்த்தால் என்ன? எம்.டி.யைச் சந்திக்க முடிந்தால் நன்றாக இருக்குமே...!

பர்சனல் லோன் சாங்க்ஷன் ஆனால்... அந்த நல்ல செய்தியோடு அவரைப் போய்ப் பார்க்கலாமே...

யோசனையை உடனே செயல்படுத்த எண்ணி... அலுவலகம் நோக்கிப் பேருந்து ஏறினாள்.

கெட்ட நேரம் இப்படியா... போகும் இடமெல்லாம் கூட வரும்...! - ஆயாசமாகப் போயிற்று... மதிக்கு.

இன்றைக்கென்று எம்.டி. அலுவலகம் வரவில்லையாம். பெருமூச்செறிந்தாள் மதியழகி.

இவளது தந்தையைப் போன்று... வயதிலும் அனுப வத்திலும் மூத்த அக்கௌண்ட்ஸ் ஆபீஸர் கணேசனிடம் இவள் எல்லாவற்றையும் எல்லாக் கஷ்டங்களையும் கூறிப் பகிர்ந்து கொண்டிருக்கிறாள் என்பதால்... அவருக்கு இவள் வருகையின் காரணம் தெரியாமலில்லை.

"என்னம்மா செய்ய? உன் நிலைமை எனக்குப் புரிகிறது. இன்று... அவருடைய வீட்டில் திதியாம். அதனால் இன்றைக்கென்று எம்.டி. வரவில்லை. உனக்காக வேண்டு மானால்... என்னால் ஒன்று செய்ய முடியும்!" - நிறுத்தியவர் குரலைத் தாழ்த்தி...

"நாளை எம்.டி. அலுவலகம் வந்தவுடன் நீ இன்று வந்து போன விபரத்தைக் கூறி... உனக்கு உதவுமாறு பர்சனலாகக் கேட்டுக் கொள்கிறேன். நீ கவலைப்படாமல் போம்மா... இன்று நீ அலுவலகம் வந்தது யாருக்கும் தெரிய வேண்டாம்."

யோசனையுடன் 'சரி' என்று தலையாட்டி விட்டுப் படியிறங்கினாள் மதி.

ஒருவேளை... நானாக அவசரப்படுகிறேனோ! அவர்தான்... 'நண்பர் வந்ததும் எவ்வளவு பணம் வேண்டு மானாலும் கண்டிப்பாகத் தருவார் என்று கூறியிருக்கிறாரே...' என்று ஒருபுறம் தோன்றினாலும்...

மறுகணமே... 'ஆமாம்... சேட்டோ மற்ற அட்வான்ஸ் கொடுத்த ஃபிளாட்காரர்களோ வந்து பணத்திற்கு நின்றால்... இவளல்லவா ஃபேஸ் செய்ய வேண்டும். சரி... கல்லெறிந்து பார்க்கலாம்... என்று நினைத்ததில் தவறில்லையே...!'



பலவாறாக எண்ணங்கள் மனதில் மோத... அவளையும் அறியாமல்... அவள் செல்ல வேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்திருந்தாள்.

கதவைத் திறந்த பெண்மணி... இவளைக் கண்டதும் துணுக்குற்று... "வாம்மா மதி! நீ இப்போது வந்திருக்கே? முத்தையனைப் பார்க்கலையா?"

திடுக்கிட்டாள் மதி.

அது... முத்தையனின் சித்தி வீடு. சாரதாமணியின் பாட்டியும்... வளர்மதியின் பாட்டியும் கூடப் பிறந்த சகோதரிகள். அவ்வகையில் தூரத்து உறவு முறையில் சித்தி வேண்டும்.

வளர்மதிக்கோ... சாரதாமணிக்கு நேர் எதிர்மறை யான குணம். இருக்கும் ஒரே பெண்... அமெரிக்காவில் திருமணமாகி செட்டில் ஆகிவிட... கணவரின் பென்ஷன் தொகை... அவர் விட்டுச் சென்ற ஏராளமான பேங்க் பேலன்ஸில் இருந்து கிடைக்கும் வட்டி... எனப் பிரச்சினை யில்லாத வாழ்க்கை!

இந்தப் பெரிய வீட்டில்... அவர் இருந்த இடம் என்ற சென்டிமென்ட்டினால் விற்காமல்... வாடகைக்கும் விடாமல்... தனி ஆளாக இருந்து கொண்டிருக்கிறாள்.

செத்துவிடக் கோழைத்தனமாக முடிவெடுத்த முத்தையனை... எப்படியோ மனதை மாற்றிக் காப்பாற்றிய மதியழகி...

வேறு வழியே இன்றி இந்த யோசனையைக் கூறி யிருந்தாள்.

சட்டென... பெரிய தொகை எதுவும் புரட்ட முடியாத நிலையில்... வெளிநாட்டில் இருக்கும் நண்பனிடம் பேசியிருந்தான்.

அவனும் இந்தியா... இன்னும் இருபது அல்லது இருபத்தைந்து நாட்களில் வந்துவிடப் போவதாகவும்... வந்தவுடன் உதவுவதுமாகக் கூறவும்தான்... இருவருக்கும் சிறிது தெம்பு வந்தது.

அது வரையில் என்ன செய்ய? சேட்... போலீஸில் புகார் கொடுத்து... உள்ளே வைக்காமல் விட மாட்டேன்... உனக்கெல்லாம் எதுக்கய்யா பெண்டாட்டி... குடும்பம்... என்று ஏகத்திற்கும் ஏசிவிட்டுப் போயிருந்தான்.

மனதளவில் மிகவும் நொடித்துப் போயிருந்தவனை... ஆறுதல் கூறி... தேற்றினாள் மதியழகி!

"நாங்கள் பெண் பிள்ளைகளாய் இருப்பதால்... எப்படியாவது பேசி... கொஞ்சம் கொஞ்சம் நாட்களைத் தள்ளிப் போடலாம்! நடுவில் அவ்வப்போது கொஞ்சம் பணம் கொடுத்து... சேட்டைக் கொஞ்சம் சமாளிக்கலாம். அதற்குள் நிலைமை சரியாகி விடாதா... என்ன?"

இருவருமாக இது விஷயமாக முடிவெடுத்தபோது... யார் கண்ணிலும் படாமல் முத்தையன்... ஒரு பத்து நாட்கள் இருக்கத் தோதாக... வளர்மதியின் வீடே இருப்பதாகப் பட்டது.

யாருக்குமே சொல்லாமல்... தன் தாய், சகோதரிக்குக் கூடச் சொல்லாமல்... இங்கே இருந்த முத்தையன்... இப்போது எங்கே போனார்? – கேள்வியுடன் வளர்மதியின் முகம் நோக்கினாள் மதியழகி.



அவள் முகம் வியப்பால் விரிந்தது.

மகிழ்ச்சியா... ஆச்சரியமா என்று புரிபடாத வகையில் புருவங்கள் உயர்ந்தன.

# 23

"ஆமாம்மா... மதி! முத்தையனோட நண்பன் ஊரிலிருந்து வரணும்னு சொல்லிக் கிட்டிருந்தானே... அவன் கிட்ட நேற்று ரொம்ப நேரம் ஃபோனில் பேசிக்கிட்டிருந்தான் முத்தையன்!

"அந்த துரை போன வெளிநாட்டு புராஜெக்ட்... நல்ல படியாக முடிந்து நல்ல லாபமாம். ரொம்ப நல்ல மூடில் இருந்தானாம். இவன்... பண விஷயமாகப் பேசியதுமே... அங்கிருந்தே இங்கே அவன் கம்பெனியில் உள்ள மானேஜருக்கு ஃபோன் செய்து பேசிவிடப் போகிற தாகச் சொன்னானாம்...

"முத்தையன் இங்கே அவன் நண்பனுடைய கம்பெனிக்குப் போய்... பணத்தை வாங்கிக் கொள்ள வேண்டியதுதான் பாக்கி. நிலைமை சரியான பிறகு... கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிக் கொள்ளலாம்..."

மதியழகிக்குப் போன உயிர் வந்த மாதிரி இருந்தது.

இந்தச் செய்திக்காகத்தானே இவ்வளவு நாள் தவமிருந்தாள்.

பாதியில் இருக்கும் கட்டடங்களை முடிக்கும் அளவுக்கு நிதி கிடைத்தால் போதும். முடித்து விட்டால்... அதற்குள் கணிப்பொறித் துறையில் நல்ல முன்னேற்றமும் வந்து

விடும். ஃபிளாட்டுகளையும் நல்ல விலைக்கு விற்று விடலாம்.

சேலைத் தலைப்பில் முகத்தை ஒற்றிக் கொண்டே... "நீங்க செய்த இந்த உதவியை என்றுமே மறக்க மாட்டோம் சித்தி! இதுவரை உங்களுக்குத்தான் நிரம்பச் சிரமம் கொடுத்து விட்டோம்..."

"ச்சே... ச்சே... என்னம்மா நீ! முத்தையன் யாரு? என் பிள்ளை மாதிரிதானே... ஏதோ உங்க வாழ்க்கையில் இனிமேலாவது வெளிச்சம் வந்தால் போதும்."

"சரி சித்தி... நான் கிளம்பறேன். என்னை வரச் சொன்னார். நான் வருவதற்குள் கிளம்பி விட்டாரே!"

"உனக்காகத்தான் மதி... வெகு நேரம் காத்துக் கொண்டிருந்தான். நீ வரவில்லையென்றதும்... இப்போது கொஞ்ச முன்னாடிதான் கிளம்பினான்."

மதி... வளர்மதி கொடுத்த காபியை அருந்திவிட்டு... மேலும் ஒரு பத்து நிமிடங்கள் இருந்து விட்டுக் கிளம்பினாள்.

பாவம் அத்தை! இவரைக் காணாமல் எப்படித் தவித்து விட்டார்! பெற்ற பிள்ளை உயிரோடு இருக்கிறானா இல்லையா என்பதே தெரியாத நிலை எவ்வளவு கொடுமையானது.

நல்ல காலம்... அந்த இறுக்கமான சூழ்நிலை மேலும் நீடிக்காது ஒரு முடிவுக்கு வந்துவிட்டதே...

வனிதாவும் பாவம்.... அண்ணனைப் பார்த்தால் எவ்வளவு சந்தோஷப்படுவாள்...!



மற்றவர்கள் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள் என்று நினைத்து நினைத்தே சந்தோஷப்பட்டது... அப்பேதை உள்ளம்.

இனி... இதுவரை பட்ட துன்பமெல்லாம் பனி போல் விலகி விடும்.

இந்த ஞாயிற்றுக் கிழமை... பணத்திற்குக் கெடு வைத்திருக்கிறான் சேட்...!

அதற்குள் ஒரு தவணையாவது... தவணை என்ன... முழுவதுமே கூடக் கொடுத்து விடலாம்... துரை தந்த பணம் வந்து விட்டால்...!

நினைத்தவாறே... வீட்டை நெருங்கியவளை...

வாசலிலேயே நிறுத்தியது சாரதாமணியின் கணீர்க் குரல்.

"நில்லுடி... அங்கேயே!"

## 24

"அத்தை... நான்..."

"அத்தையாம் அத்தை! என்னை அப்படிக் கூப்பிடக் கூடச் செய்யாதே!"

"அத்தை... நீங்க!"

"என்ன காரியம் செய்திருக்கே...? இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போல இருந்து கொண்டு... என்ன நெஞ்சழுத்தம்டி உனக்கு?"

இதற்குள் முத்தையன் வாசலுக்கு வந்து விட்டான்.

"மதி! உள்ளே வா. அம்மா! அவளை உள்ளே விடு. இதென்ன வாசலிலேயே நிக்க வைச்சு..."

"நீ உள்ளே போ. முத்தையா! இன்னும் ஒரு அடி எடுத்து அவ வைச்சா... இங்க நடுக்கூடத்தில ஒரு பொணம் விழும். சொல்லு அவகிட்ட...!"

அதற்குள்... சமையலறையில் அண்ணனுக்காக டிஃபன் செய்து கொண்டிருந்த வனிதா அப்படியே போட்டு விட்டு ஓடி வந்தாள்.

தாயை விடப் பல மடங்கு கோபத்தில் இருந்தது... அவள் உள்ளம். ஆனாலும் இது மானம் போகும் விஷய மாயிற்றே!

"அம்மா! மொதல்ல அண்ணியை உள்ளே வர விடுங்க... எதுவானாலும் உள்ளே வைச்சுப் பேசிக்கலாம்..."

கோபத்துடன் சாரதாமணி நகர்ந்து கொள்ள... மதி நடுங்கியவாறே உள்ளே நுழைந்தாள்.

முத்தையன் எதுவுமே சொல்லவில்லையா, அவர் அம்மாவிடம்?

தான் இந்தத் திட்டத்திற்கு ஆரம்பம் முதலே.. உடன்படாமல் போனதும்... முத்தையன்தான்... தன்னைச் சமாதானப்படுத்தி... ஒப்புக் கொள்ள வைத்ததும்.. அவர் சொல்லவில்லையா?

தான் அகலக் கால் வைத்து... கடன் வாங்கி விட்டு... அதைச் சரி செய்ய வழியில்லாது போனபோது... பெண்பிள்ளை போல... ஓடி ஒளிந்த மகன்... நல்லவனா?



ஒருபுறம் கணவனைப் பற்றிய எல்லாம் தெரிந்தும் எதையும் வெளியே சொல்லவும் முடியாது... கடன் கொடுத்த சேட்டிற்கும்... முதல் போட்ட மற்ற வாடிக்கையாளர்களுக்கும் பயந்து பயந்து செத்து... மாமியார் நாத்தனாரைக் கூட இருந்து... இத்தனை நாள் பார்த்துக் கொண்ட நான் கெட்டவளா?

தலை சுற்றியது மதியழகிக்கு.

வெறுப்புடன் முத்தையனை ஒரு கோபப் பார்வை பார்த்தாள்.

முத்தையன்... இவள் வரும் முன் என்ன சொன்னானோ... அல்லது சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் விட்டானோ... இப்போது பேச வந்த முத்தையனைப் பேச விடாமல்... கையமர்த்திச் சாரதாமணி பேசிக் கொண்டே போனாள். இல்லை இல்லை... ஏசிக் கொண்டே போனாள்.

"அத்தை! என்னை ஒரு வார்த்தை பேச விடறீங்களா? இது எல்லாவற்றிற்கும் காரணம் உங்க மகன்தான். அவர்தான்..."

"பார்த்தியாடா... முத்தையா! எல்லாவற்றிற்கும் நீதான் காரணமாம். இவ ஒண்ணுமே தெரியாத பாப்பா... பாரு! ஏன்டி... இவன்தான் ஆம்பிளை. முன்னே பின்னே யோசிக்காம... எங்கேயோ போய் அதிலேயும் பாரு... எனக்குக் கொஞ்சமும் பிடிக்காத வளர்மதி வீட்டுக்குப் போய் உட்கார்ந்துக்கிறேன்... கடனை அடைக்கப் பணம் கிடைச்சதும் வரேன்னு சொன்னான்னா... நீ உடனே தலை ஆட்டிடறதா?"

"அத்தை! உங்களைப் பத்தியே சொல்றீங்களே... என்னைப் பற்றி யோசிச்சுப் பார்த்தீங்களா...? அவர் உயிரோடு... ஏதோ ஒரு புறம் இருந்தால் போதும்... தப்பான முடிவுக்கு வந்துடக் கூடாது. கடனை அடைக்கப் பணம் எப்படியும் புரட்டி விடலாம்... நிலைமையும் கூடிய சீக்கிரம் சரியாகி விடும். அதுவரை இவர் அவமானம் தாங்காமல்... ஏதும் பண்ணிக் கொண்டு விடக் கூடாதே என்ற பரிதவிப்பில்தான் அத்தை... எல்லாத்துக்கும் தலையாட்ட வேண்டியதாகி விட்டது...

"நீங்கள் இவர் உயிரோடுதான் இருக்காரோ இல்லையோ... என்றெல்லாம் வருத்தப்படும்போது... உண்மையையும் சொல்ல முடியாமல்... நான் பட்ட மன வேதனை எனக்குத்தான் தெரியும் அத்தை!"

"அண்ணி! அம்மா உங்களைக் குற்றம் சொல்றாங்கன்னு மட்டும் கோபப்படறீங்களே... அவங்க சொல்றதுல இருக்கிற நியாயம் உங்களுக்குப் புரியலையா!

"அந்த சேட்... நம்மை... அம்மாவை எவ்வளவு தரக்குறைவா பேசினான். ஒருவேளை சினிமாவில் வர்ற மாதிரி... அவன் என்னைக் கைபிடிச்சி இழுத்திருந்தாக் கூட... மானம் போயிருந்தாக் கூட... அண்ணன் சாவகாசமா வந்து... போன மானத்தைக் காப்பாற்ற முடியுமா... அண்ணி?"

அதிர்ந்து கூடப் பேசாதவள்... அண்ணிக்காகச் சிற்சில சமயங்களில் அம்மாவைக் கூட... எதிர்க்கத் தயங்காதவள் இன்று நியாயம் பேசுகிறாள்!

'ஏண்ணே... இப்படி பொட்டப்புள்ளை மாதிரி எங்களை விட்டுட்டு ஓடிட்டாயே...! அந்த சேட் என்னைக் கைப்பிடிச்சு



இழுத்திருந்தா... என்னவாகி இருக்கும்? நீயெல்லாம் ஒரு அண்ணனா!' என்று அண்ணனை நிற்க வைத்துக் கேள்வி கேட்க வேண்டியவள்... அண்ணனை வீட்டில் சேர்த்துக் கொண்டு... இவளைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறாள். எல்லாம் நேரம்...!

இதற்கு மேலும் அவளுக்கு மாமியாருடனும் நாத்தனாருடனும் மல்லுக்கு நிற்க வலுவிருக்கவில்லை.

## 25

சண்டைக்காரன் காலில் விழுவதை விட... சாட்சிக்காரன் காலில் விழுவதே மேல்... என்று ஒரு பழமொழி சொல்வார்களே... அதுபோல... நேராகக் கணவனிடம் போனாள்.

"என்னங்க... என்ன நடக்குது இங்கே? என்னைக் கைதி மாதிரி விசாரணை பண்ணிட்டிருக்காங்க...! உங்களுக்கு உங்கள் ஃபிரண்ட் மூலமா... பணம் கிடைச்சாச்சுன்னு வளர்மதி சித்தி சொன்னாங்க. கடனிலிருந்து விடுபட்டு... வளரப் போறோம்னு ஆசையா ஓடி வந்தேன். இங்கே... பிரச்சினையை அத்தை அப்படியே... திசை திருப்புறாங்களே... நீங்களும் என்ன ஏதென்று கேட்க மாட்டீங்களா?"

"என்னை மன்னிச்சிடு மதி! நான் தப்பு செய்திட்டேன். அம்மாகிட்டயும் வனிதாகிட்டயும் மட்டுமாவது உண்மை சொல்லியிருக்கணும். இப்போ... என்ன பணம் வந்து என்ன... கடன்காரங்களைச் சமாளிக்க வக்கில்லாம... ஓடிப் போன முத்தையனோட அம்மாதானே இவங்கன்னு நாலு

பேர் நாலு விதமாப் பேசுவாங்களே... அம்மாவோட அந்த அவமானத்தை எப்படி என்னால துடைக்க முடியும்?"

தலை சுற்றியது மதிக்கு.

'நாலு பேர்... நாலு விதமா பேசினா என்ன...? நாளைக்கு ஒரு பெரிய ரியல் எஸ்டேட் ஓனரா பெரிய அளவிலே வளர்ந்த பிறகு... அந்த நாலு பேரே... வந்து சலாம் போடுவாங்க... பாரு மதி...' என்று சொன்ன முத்தையனா... இது!

"மதி! நீயும் என்னைப் பார்க்க இப்போ வந்து விட்டிருந்தாய். இங்கே என்ன நடந்தது தெரியுமா?"

தலைக்கு மேலே போயாயிற்று. இனி சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன?

இனி... அதிர்ச்சி தரும் எதையும் சொல்ல முடியுமா என்ன... என்பது போல முத்தையனைப் பார்த்தாள் மதியழகி.

"நான் அம்மாவைப் பார்க்க ஆசையாக வந்தபோது... இனி வேறு வழியே இல்லை... மானம் போய் வாழ்வதை விட உயிரைப் போக்கிக் கொள்வதே மேல் என்று அம்மாவும் வனிதாவும் அவர்களுடைய சாப்பாட்டில் விஷம் கலந்து கொண்டிருந்தனர்.

"சரியான நேரத்தில் மட்டும் அவர்கள் என்னைப் பார்த்திருக்கா விட்டால்... இப்போது நீயோ... நானோ அவர்களை உயிரோடு பார்த்திருக்க முடியாது மதி!

"பெற்றவளையும் கூடப் பிறந்தவளையும் அனாதை யாகத் தவிக்க விட்டு... சாகடித்தவன் என்ற பழியோடும் குற்ற உணர்வோடும் ஆயுள் முழுக்க நடைபிணமாக வாழ வேண்டி வந்திருக்கும்..."



திகைத்துப் போய் நின்றாள் மதியழகி.

அவளும் இதை எதிர்பார்த்திருக்கவில்லை.

ஒருவேளை அப்படி நடந்திருந்தால்... தானும் அல்லவா அந்தப் பழிச் சொல்லிற்குப் பொறுப்பேற்றிருக்க வேண்டும்.

இவ்வளவு நாட்களாக... பெரும் நம்பிக்கையோடு இருந்த அத்தை... இன்று ஏன் வெண்ணெய் திரண்டு வரும் சமயம் தாழியை உடைத்த கதையாக... இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கிறார்!

இவளுமே... வேதனை மேலிட... நிற்க முடியாமல்... சட்டென... பக்கத்து சோபாவில் அமர்ந்தாள்.

இவளது வேதனையை... உணராவண்ணம் மேலும் வார்த்தைகளைக் கக்கினான் முத்தையன்.

"நான்தான் ஏதோ முட்டாள்தனமாக இப்படி ஒரு முடிவு எடுத்து அம்மாவையும் வனிதாவையும் வருத்தப்பட வைத்து விட்டேன் என்றால், இவர்கள் கூடவே இருந்தவள் நீ... நீயாவது எனக்குச் சொல்லியிருக்கக் கூடாதா... மதி!

"இவர்கள் வேதனையை என்னிடமிருந்து மறைத்து எல்லாரும் நன்றாக இருக்கிறார்கள்... நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று பொய்யாக ஆறுதல் கூறி இவர்களைச் சாகடிக்கப் பார்த்தாயே..!"

மனதளவில் காதுகளைப் பொத்திக் கொண்டாள் மதி.

இதற்கு மேலும் கேட்க ஒன்றுமில்லை.

எல்லோரிடமிருந்தும் வேண்டியதைக் கேட்டாயிற்று.

தனக்கு இது வேண்டும்தான்.

தனிமையில் அம்மா. வனிதா பற்றிக் கவலைப்பட்டு மறுகப் போகிறானே என்று... நான் பார்த்துக் கொள்கிறேன்... கவலைப்பட வேண்டாம் என்று ஆறுதல் கூறியவளுக்கு வேண்டியதுதான்... இந்த நாசகாரி என்ற பட்டம்.

இனிமேலும் அங்கே நின்று கொண்டிருந்தால் இன்னும் என்னவெல்லாம் கேட்க வேண்டி வருமோ என்று அஞ்சியவளாய் உள்ளே சென்றாள்.

வார்த்தைகள் முதுகைத் துளைத்தன.

'இனி என்ன' என்ற கேள்வி பூதாகரமாகத் தன் முன்னே எழுந்தது.

## 26

'தெரசா மகளிர் விடுதி' நகரின் மையப் பகுதியில் இருந்த... உழைக்கும் மகளிர் விடுதியில்... இரண்டாவது தளத்தில் மூன்றாவது அறை.

நிறை மாதமாய்... மதியழகி கட்டிலில் அமர்ந்திருக்க... எதிரே தலையணையை முட்டுக் கொடுத்தபடி... அவளையே இமைக்காமல் பார்த்தவண்ணம் இருந்தாள் பூமிகா.

இவளைப் போலவே தனியார் நிறுவனமொன்றில் உதவியாளராக இருக்கிறாள். இவளுடைய அறைத் தோழி.

பெருமூச்செறிந்தாள் பூமிகா. "கேட்கவே சங்கடமாயிருக்கிறது மதி... எப்படித்தான் தாங்கிக் கொண்டாயோ... அத்தனை வலிகளை..."



"என்ன செய்ய? பெண்ணாகப் பிறந்து விட்டேனே...!"

"அப்புறம் என்னவாயிற்று மதி? உன்னை வீட்டை விட்டுப் போ என்றெல்லாம் யாரும் சொல்லவில்லையே... அப்புறம் என்ன... நாளடைவில் சரியாகி இருக்காதா... என்ன?"

"என்னை வீட்டை விட்டுப் போக யாருமே சொல்ல வில்லை பூமிகா! ஆனால் அப்படி நடந்து கொண்டார்கள். செய்கையால் சொன்னார்கள். ஒருபுறம் மாமியார், நாத்தனார் இவர்களின் பாராமுகம்... பாராமுகம் என்பது மட்டுமல்ல. ஜாடை ஜாடையாக வார்த்தைகளை அமிலமாய் அள்ளித் தெளித்தனர்..."

"உன் கணவர்... அதற்குப் பிறகும் கூடவா உனக்கு ஆறுதலாக இல்லை? அவருக்காகத்தானே... நீ அவர் சொன்னதற்கெல்லாம் ஒப்புக் கொண்டாய்?"

"ஆறுதலாக இருந்தார்தான். என்னையும் இப்படி மாட்டி விட்டதற்கு மன்னிப்புக் கூட கேட்டார். எங்கே தெரியுமா? நாலு சுவருக்கு மத்தியில்! சாத்திய அறைக்குள் கண்ணீர் மல்காத குறையாக... சமாதானப்படுத்தும் அவரைப் பார்க்கும்போது... இவர் மேல கோபப்படுவதில் நியாயமில்லை. இவரும் பாவம் என்று நான் என்னையே சமாதானப்படுத்திக் கொள்வேன்.

"ஆனால் அத்தையும் வனிதாவும் என்னை நடத்திய விதம் இருக்கிறதே... அப்பப்பா...! ஒரே நாளில் ஒருத்தி... எப்படி அப்படி ஜென்ம விரோதியாய் மாற முடியும் என்று வியப்பாக இருக்கும்..."

"என்ன இருந்தாலும் வயிற்றில் பிள்ளையுடன் நீ வீட்டை விட்டு வந்திருக்கக் கூடாது மதி...! கொஞ்சம் யோசித்திருக்கலாம். இப்போது பார்..."

பேசிக் கொண்டே போன பூமிகாவைக் கைகளைக் காட்டி நிறுத்தினாள் மதியழகி.

"வயிற்றுக் குழந்தை என்கிறாயே... அதனால்தான். நான் அங்கே மேலும் இருக்க முடியாதென்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது... பூமிகா!

'ஒருபுறம் புருஷனை ரகசியமாய்ப் போய் பார்த்து வந்து விட்டு... அவன் இருப்பிடமும் தெரிந்து கொண்டே... மறுபுறம் காணாமல் போன அவனைத் தேடுவதைப் போல நடித்துக் கொண்டிருந்த இவள்... எந்தக் கீழ்த் தரமான செயலையும் செய்யத் தயங்கமாட்டாள்...' என்று ஆரம்பித்து... என் மாமியார் பேசிய பேச்சுகள் இருக்கிறதே... அப்பப்பா!" - காதுகளைப் பொத்திக் கொண்டாள் மதியழகி... இன்னமும் மாமியாரின் வசவுகள் காதுகளில் எதிரொலிப் பதை அனுபவிப்பவள் போல.

"இப்போதைய என் ஒரே ஆதரவு வளர்மதி சித்தி மட்டுமே. என் நிலைமைக்காக உண்மையாகவே பரிதாபப் பட்டவர்கள். எனக்குப் பிள்ளை பிறக்கும்போது கண்டிப்பாக வந்து உதவுவார்கள்..."

"அவர்களுடன் நீ போய் இருக்கலாமே மதி... அவர்களும் தனியாகத்தானே இருக்கிறார்கள்."

"இல்லை பூமிகா! இனி நான் யாரையும் உளமார நேசிக்கப் போவதில்லை. இனியும் ஏமாற என்னில் கொஞ்சமும் சக்தியில்லை."



மௌனமாகச் சில நிமிடங்கள் கழிந்தன.

பூமிகா தோழிக்கு ஆறுதல் சொல்ல... இருவரும் இரவு உணவிற்கு விடுதியின் டைனிங் ஹால் நோக்கிச் சென்றனர்.

அங்கிருக்கும் பெண்களில்... பெரும்பாலானோர் குடும்பம் வேறொரு ஊரில் இருக்க... வேலை நிமித்தமாக இங்கே விடுதியில் தங்கியிருப்பவர்கள். பூமிகாவும் அப்படியே... திருச்சூரில் அப்பா, அம்மா இருக்கிறார்கள்.

இங்கே வங்கியில் வேலை. சிலர் மதியழகி போல...! கணவனை இழந்தவர்கள்... கணவனைப் பிரிந்து வாழ்ப வர்கள்... என்றும் உண்டு.

## 27

பூமிகாவிற்குத் தன்னைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்த மதியழகி... தன்னையும் அறியாமல் கடந்த காலத்தை விட்டு வர முடியாமல் தவித்தாள்.

தன்னால் அங்கே காலம் தள்ள முடியாத அளவிற்கு அத்தையும் வனிதாவும் ஜாடை பேச அத்தனையும் கேட்டுக் கொண்டு வாழ்வதா... இதற்கு இறந்து விடுவதே மேல்... என்று நினைத்தாள்தான்.

முதுகெலும்பில்லாத முத்தையனின் செய்கை அவளை மேலும் ஆத்திரமூட்டியது.

எதுவுமே நடவாதது போல... மறுநாளே நண்பனின் கம்பெனிக்குச் சென்று... அங்கிருந்தே நண்பனுக்கு

வெளிநாட்டுக்குப் பேசி... பணமும் வாங்கிக் கொண்டு வந்து விட்டான்.

சேட்டிற்கோ முத்தையன் திரும்பி வந்ததைப் பார்த்ததுமே... எப்படியும் தான் கடன் கொடுத்த பணம் வந்துவிடும் என்ற நம்பிக்கை வந்து விட்டது.

தானும் சொல்லாமல் கொள்ளாமல் போனதாகப் பே வந்துவிடப் போகிறதே என்பதற்காக... ஒப்புக்கு வேண்டா வெறுப்பாக... அத்தையிடமும் வனிதாவிடமும் சுவரைப் பார்த்தவாறே சொல்லிவிட்டு வீட்டை விட்டுக் கிளம்பி விட்டாள்.

முத்தையன் தான் எப்படியாவது அம்மாவிடம் பேசுகிறேன்... நீ மறுபடியும் வீட்டுக்கு வா... என்று மன்றாடி பார்த்தான்.

'மறுபடியும் அந்த வீட்டிற்கா! இனிமேல்... அத்தை பேசியது இல்லையென்றாகி விடப் போகிறதா... என்ன?' - வருத்தத்துடன் மறுத்து விட்டாள் மதியழகி.

எங்கே செல்வதென்றே தெரியாமல்... வெளியேறிய மதியழகிக்கு... சட்டென நினைவுக்கு வந்தவர் முத்தையனின் சித்தி வளர்மதிதான்.

அவர் காதுகளுக்கு இங்கே நடந்தவை போனால்... அவரும் வருத்தப்படுவார் என்று நினைத்து எதுவும் சொல்லாமல் விட்டிருந்தாள்.

வயிற்றில் பிள்ளை இல்லையென்றால் கூட... ஏதோ ஒருபுறம் தன் சம்பாத்தியத்தில் வயிற்றைக் கழுவிக் கொ ளலாம்.



ஆனால் கருத் தரித்திருக்கும் இந்நிலையில் அவளுக்கு யாராவது பெண் துணை அவசியம் தேவையாயிற்றே...

பலவாறாக யோசித்தவள்... வளர்மதியைத் தஞ்சமடைந்தாள்.

நடந்த எல்லாவற்றையும் அறிந்திருந்த வளர்மதி... "நானே இது பற்றி சாரதா அக்காவிடம் பேசுகிறேன். முத்தையன் செய்த தவறுக்கு உன்னைத் தண்டிப்பதா?

"கஷ்டத்தில் எல்லாம் நீ... கூட இருந்துவிட்டு... இப்போது கஷ்டம் நீங்கி... நாலு காசு பார்க்கும்போது முத்தையன் உன்னைத் துரத்தி விட்டானா! நான் இப்போதே கேட்கிறேன்!" என்று கிளம்பியவளைப் பெரும்பாடு பட்டுத் தடுத்து நிறுத்தி விட்டாள் மதியழகி.

"வேண்டாம் சித்தி! ஏற்கெனவே உங்களைக் கண்டால் அத்தைக்கு ஆகாது. நீங்கள் என்னால் வீணாக அவமானப்பட வேண்டாம்..."

"வாழ்க்கை என்ன... ஒரு குழாயடிச் சண்டை மாதிரியா! என்னவெல்லாமோ பேசி விடலாம் ஜெயிப்பதற்கு என்பதற்கு...!"

"இங்கே அன்பால் ஜெயிக்க வேண்டும் சித்தி... அதிகாரத்தையும் உறவு முறையையும் பயன்படுத்தி ஜெயிக்க நினைப்பவர்களே இங்கே அதிகம். போதும்... இனி யாரிடமும் சண்டை போட என்னில் சக்தியில்லை. எனக்கு என் பிள்ளை போதும்..."

அதற்குள் முத்தையன் விஷயத்தைத் தெரியப்படுத்தி விட...

மதியழகியின் அண்ணனும் ஃபோனில் மன்றாடிப் பார்த்து விட்டான்... அவளை முத்தையனோடு வாழச் செய்ய!

"நீ ஒரு வார்த்தை சொல்லம்மா! ஒரு வார்த்தை கூட நீ சொல்ல வேண்டாம். நான் அடுத்த பஸ்ஸிலேயே புறப்பட்டு அங்கே வருகிறேன். மாப்பிள்ளையை என்ன ஏதென்று உலுக்கி விடுகிறேன். உன்னை வீட்டை விட்டு விரட்ட என்ன தைரியம்... நான் ஒருவன் இருப்பதை மாப்பிள்ளை மறந்து விட்டாராம்மா...?"

"ஐயோ! உங்கள் மாப்பிள்ளையின் மீது முழுத் தப்பும் இல்லையண்ணா! என்ன இருந்தாலும் அவர்கள்... அனைவரும் ஒரே ரத்தம். நான் வேறு வீட்டிலிருந்து வந்தவள் என்று பிரித்துக் கறிவேப்பிலை போல... காம்பைப் பிய்த்துப் போட்டு விட்டார்கள்!

"என்ன இருந்தாலும் அத்தையும் வனிதாவும் அவரைக் காணாமல் என்ன மனக் கஷ்டம் அனுபவித்தார்கள்... அதைக் கூடவே இருந்து பார்த்துக் கொண்டிருந்தும்... மறைத்தது என் தப்புதானே என்று எனக்குமே ஒரு குற்ற உணர்வு இருக்கிறது அண்ணா! அதற்குத் தண்டனையாகக் கூட நான் இந்தப் பிரிவை ஏற்றுக் கொள்கிறேன் என்று வைத்துக் கொள்ளலாம்..."

பேசிப் பேசி... ஒருவாறாகத் தமையனைச் சமாதானப் படுத்துவதற்குள் ஒரு வழியாகி விட்டாள்.

தன்னுடன் வந்திருக்கும்படி... அண்ணன் அழைத்த போதும்... வாழாவெட்டியாய்ப் போய் இருக்க மனமின்றி... மறுத்து விட்டாள்.



# 28

இப்போதும்கூட... வளர்மதியுடன் பத்து நாட்கள் இருந்தவள்... அதற்கு மேலும் தன் பாரத்தை அவரிடம் சுமத்தாமல்... விடுதிக்குச் சென்று விட்டாள்... அவர் எவ்வளவோ சொல்லியும் கேளாமல்!

முத்தையன் மட்டும் அதற்குப் பிறகு திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

மதியழகி... மனதில் இவையெல்லாவற்றையும் போட்டுக் குழப்பிக் கொண்டே... இவற்றையே நினைத்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ மன இறுக்கம் அதிகமாகி...

அன்றிரவே இடுப்பு வலி ஆரம்பமாகி விட்டது.

மதியழகி ஏற்கெனவே சொல்லியிருந்ததைப் போல அவளை அருகிலேயே இருந்த மருத்துவமனையில் அட்மிட் செய்த கையோடு வளர்மதிக்குத் தகவல் தந்து விட்டாள் பூமிகா.

மறுநாள் விடியற்காலையிலேயே அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் மதியழகி.

வயிறும் மனமும் லேசாகி விட... குழந்தையைக் கண்ணருகில் பார்த்து விட்டு மெல்ல மயக்கத்திற்குப் போய் விட்டாள் மதி.

"பூமிகா! ரொம்ப நன்றிம்மா... நீ கூட இருக்கும் தைரியத்தில்தான்... நான் கூப்பிட்டும் கூட வராமல் விடுதியிலேயே இருந்தாள். நான் இனிமேல் கூட இருந்து பார்த்துக் கொள்கிறேன். நீ வேண்டுமானால் ஹாஸ்டலுக்குக் கிளம்பும்மா..."

மதியழகியை வளர்மதியிடம் ஒப்படைத்து விட்டு விடுதிக்குக் கிளம்பினாள் பூமிகா.

மதியின் கதை... இவள் மனத்தையும் பாரமாக்கியிருந்தது.

வளர்மதி... அயர்ந்து தூங்கும் மதியையும் தொட்டிலில் கண்ணயர்ந்திருக்கும் குட்டி மதியையும் பார்த்தவாறே... அறைக்கு வெளியே வந்தாள்.

எங்கும் மருந்து நெடி! மனம் முழுக்க வேதனையுடன் மனிதர்கள்.

வளர்மதி நினைத்துக் கொள்வாள்... மருத்துவ மனையில் உடல் முழுக்க வியாதியுடன் வலம் வரும் மனிதர்களைப் பார்க்கும்போது... தான் ஆரோக்கியமாக இருப்பதே எவ்வளவு பெரிய சொத்து என்பது புரியும்.

உடல் உபாதைகளால் கஷ்டப்படுபவர்கள் ஒருபுறம் என்றால்... மதியழகி போல் மனக் கஷ்டத்தோடு... வலம் வருபவர்கள் மறுபுறம்.

மதியழகியைப் பற்றிய நினைவு வந்ததும்... அவள் நிலைமைக்குப் பரிதாபப்படுவதா... அல்லது அவளுடைய சோர்வடையாமல் தனித்து நின்று போராடும் குணம் கண்டு பெருமைப்படுவதா என்று புரியாது போயிற்று.

தன் அக்காதான் இவற்றிற்குக் காரணம் என்று தெரிந்ததால்... அதற்காகவாவது இவளுக்குப் பக்கத் துணையாகத் தான் இருந்து... பரிகாரம் செய்ய வேண்டும் என்று அன்றே தீர்மானித்துக் கொண்டிருந்தாள்.



முத்தையனாவது... வந்து சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டு போவான் என்று எதிர்பார்த்தவளுக்கும்... ஏமாற்றம்தான் மிஞ்சியது.

மறுத்துப் பேச இவளும் பக்கத்தில் இல்லாததால் சாரதா அக்கா... என்னவெல்லாம் சொல்லி முத்தையன் மனசைக் கலைத்து விட்டாளோ!

பாவம் இந்தப் பெண்! முத்தையன் மாதிரி எடுப்பார் கைப்பிள்ளையாய் இருக்கும் ஆண் பிள்ளைகளைத் திருமணம் செய்து கொள்ளும் பெண்கள் நிலைமையே இப்படித்தான்!

மதியழகி கண் விழித்தாலோ... கைக்குழந்தை அழுதாலோ காதுகளில் விழும் வண்ணம் வாகாக நின்று கொண்டு யோசனையில் ஆழ்ந்தாள்.

என்னதான் இருந்தாலும்... இது முத்தையனின் குழந்தை. சாரதா அக்காவின் முதல் பேத்தி. பெரியவள் என்ற முறையில் நானாவது இவ்விஷயத்தை முத்தையனுக்குத் தெரியப்படுத்தித்தான் ஆக வேண்டும்.

யார் கண்டது!

பிறந்த இக் குழந்தையே அப்பாவையும்... அம்மாவையும் சேர்த்து வைக்கப் போகிறதோ என்னவோ...!

## 29

இரவு பூமிகா வந்ததும்.. மதியழகி அருகில் அவளை இருக்கச் சொல்லி விட்டு... மதியின் துணிகளை எடுத்துக் கொண்டு வர விடுதிக்குச் சென்றாள்

வளர்மதி. இவள் அந்த வார்டனுக்கு நன்கு பரிச்சயம் என்பதால் வளர்மதியை அனுமதிக்க ஏதும் மறுக்கவில்லை.

மதிக்குத் தேவையான பொருட்களைத் திரட்டி... கூடையில் போட்டுக் கொண்டு... அவள் கதவைத் தாழிடப் போனவள்... அந்த டேபிள் மீது தபாலில் வந்திருந்த கடிதத்தைக் கண்டதும் துணுக்குற்றாள்.

மேலே அனுப்புநர் விலாசம் தெரியுமாறு வைக்கப்பட்டிருந்த அக்கடிதம்... முத்தையனிடமிருந்து வந்திருந்தது.

கூடையை வைத்து விட்டு அக்கடிதத்தை எடுத்துப் பார்த்தாள் வளர்மதி. மதிக்குத் தான் முத்தையனிடமிருந்து வந்திருக்கிறது. ஆனால் ஏன் பிரிக்கக் கூட இல்லை?

அவன் மேலுள்ள கோபத்தினால் பிரிக்காமல் விட்டிருப்பாளோ! மதியையே கேட்க வேண்டும் என்று எண்ணி... அக்கடிதத்தையும் கூடைக்குள் திணித்துக் கொண்டாள்.

முத்தையனின் கைபேசி உபயோகத்தில் இருப்பதாகவும் பின்னர் தொடர்பு கொள்ளும்படியும் கூறியது.

இருக்கலாம்... அவ்வளவு பிஸியான மனுஷனாக முத்தையன் மாறியிருக்கலாம்.

மதியழகி வீட்டை விட்டு வந்த... அடுத்த ஒரு மாதத்திற்குள்ளாகவே கணிப்பொறித் துறை சீரடைந்து விட்டது.

சிறு வயதிலேயே வேலைக்குப் போய்... அதிலும் பெரிய தொகையை எடுத்த எடுப்பிலேயே மாதச் சம்பளமாக வாங்கும் இளம் தலைமுறை கணினித் துறையினர்...



அவற்றை முதலீடு செய்ய ஃபிளாட்டுகளாக வாங்கிப் போட்டதால் ரியல் எஸ்டேட் துறை மீண்டும் பழைய வேகத்தில் சூடு பிடித்தது.

தனது வீட்டை வேண்டாம் என்று சொல்லி முன்பணத்தைத் திரும்பக் கேட்டவர்கள் கூட...

இப்போது மேலும் பணம் முதலீடு செய்யத் தயார்... ஆனால் அழகான வீடு வர வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தனர்.

ஏனெனில் நிலத்தின் மதிப்பு ஆறு மாதங்களிலேயே பல மடங்கு உயர்ந்து விட்டிருந்தது.

இதற்கிடையே, முத்தையனின் நண்பன் வெளிநாட்டிலிருந்து திரும்பியவன்... வேலை நடக்கும் வேகத்தைப் பார்த்துப் பணத்தை முத்தையன் உடனே திருப்பித் தர வேண்டாம் என்று கூறி... தன்னையும் இன்வெஸ்ட்மெண்ட் பார்ட்னராகச் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டான்.

இது நல்ல புராஜெக்ட் என்று அப்போதே அவனுக்குத் தெரிந்து விட்டது.

இதையெல்லாம் வளர்மதி... மதி மூலமாகத்தான் கேள்விப்பட்டாள்.

தான் முத்தையன் கூட இல்லாவிட்டாலும்...

அவனுடைய வளர்ச்சியில் தான் இத்தனை பெருமிதப் படுகிறதே... இந்தப் பெண். இவள் நல்ல குணத்திற்காகவாவது நல்லது நடக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்வாள்.

மதி... முனகும் சப்தம் கேட்டு உள்ளே போனவள்... அவளுக்கு மாத்திரை கொடுத்து, ஆரஞ்சு ஜுஸ் கொடுத்து விட்டு... தூங்கும் குழந்தையையும் ஒரு பார்வை பார்த்து விட்டு... வராண்டாவிற்கு வந்தாள்.

முத்தையன் மதிக்கு எழுதிப் பிரிக்கப்படாமல் இருந்த கடிதம் மட்டும் நினைவிலேயே நின்றது.

மதிக்கு அவள் கணவனிடமிருந்து வந்திருந்த கடிதம் என்பதால்... மூன்றாம் மனுஷியாகிய தான் அதைப் பிரிக்கவும் முடியாது.

பிள்ளை பெற்று மயக்கமாய்க் கிடப்பவளிடம் போய்... இப்போது என்ன கேட்பது?

நிதானம் வந்து எழுந்து உட்காரட்டும். பிரித்தாவது பார்க்கச் சொல்லிக் கட்டாயப்படுத்த வேண்டும்.

ஒருவேளை முத்தையன் இவளின் இன்றைய நிலைக்கு வருந்தி... மன்னிப்புக் கேட்டிருந்தால் அதன் மூலம் மதியின் மனம் நெகிழக் கூடுமே...!

பெற்ற பெண் போல மதியிடத்து அன்பு வைத்திருந்த அந்த அன்னை உள்ளம் தவித்தது.

சரி! பெண் குழந்தை பிறந்த விஷயத்தைச் சொல்லி விடுவோம். பின் கடவுள் விட்ட வழி என்று எண்ணியவாறே...

முத்தையனின் கைபேசியை மறுபடியும் தொடர்பு கொண்டாள்.



# 30

**சில** நொடிகளிலேயே லைனில் வந்தான் முத்தையன்.

"ஹலோ!"

"ஹலோ... யார் பேசறது?"

"நான்... நான் வளர்மதி பேசறேன் முத்தையா! நீ எப்படி இருக்கே?"

"ம்..."

"என்ன விரக்தியா 'ம்...' கொட்டறே? நீ சந்தோஷப்படற மாதிரி ஒரு விஷயத்தைச் சொல்லத்தான் ஃபோன் பண்ணினேன். உனக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கு முத்தையா!"

உடனே சந்தோஷத்தைக் குரலில் பிரதிபலிப்பான் என்று எதிர்பார்த்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

"எனக்குப் பெண் குழந்தை பிறந்திருக்குன்னு சொல்லாதீங்க. அந்தத் துரோகிக்குப் பெண் குழந்தை பிறந்திருக்குன்னு வேண்டுமானால் சொல்லுங்க."

"என்னப்பா... குழந்தை பிறந்த மகிழ்ச்சியான செய்தியைச் சொல்ல ஃபோன் பண்ணினா... பேச்சே ஒரு மாதிரியா இருக்கு. ஆமாம்... நீ இப்போ எங்கே இருக்கே?"

"எங்கே இருக்கேனா? எங்க அம்மா பிணத்திற்குப் பக்கத்துல இருக்கேன். எல்லாம் புரிஞ்சிருக்குமே உங்களுக்கு...! அப்படியே... நீங்க கூட வைச்சுப் பராமரிக்கிறீங்களே அந்தத் துரோகி கிட்டயும் சொல்லுங்க... இப்போ

அவளுக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கும். அவள் எதிர் பார்த்தது இதுதானே! ஒரு மகனா என் அம்மாவோட சடங்குக்கு ஏற்பாடுகளை நான் பண்ணணும்.... ஃபோனை வைங்க."

இதற்கு மேலும் பேசினால் மரியாதைக் குறைவாகப் பேசி விடுவோமோ என்று பயப்பட்டவன் போல... ஃபோனைத் துண்டித்து விட்டான் முத்தையன்.

எல்லாம் புரிந்திருக்கும் என்றானே... முத்தையன். அது ஒன்றைத் தவிர.. வேறு ஒன்றுமே புரியவில்லை.

அக்காவுக்குத் திடீரென்று என்னவாயிற்று?

நல்ல செய்தியைத் தெரியப்படுத்தாவிட்டாலும் கெட்ட செய்தியையாவது தெரியப்படுத்த வேண்டாமா!

தனக்குக் கூட... இவன் ஏன் சொல்லவில்லை?

ஏராளமான கேள்விகள்... மனதை வண்டெனக் குடைய... செய்வதறியாது திகைத்திருந்தவள்... குழந்தை அழும் சத்தம் கேட்டு விரைந்தாள்.

மனசெல்லாம் சாரதாமணியின் முகத்தையாவது இறுதியாகப் பார்க்க வேண்டும் என்ற அவா இருந்தது.

பிள்ளை பெற்று இருபத்து நான்கு மணி நேரம் கூட ஆகாத மதியையும் குழந்தையையும் விட்டு விட்டு எங்கே போவது?

தொட்டிலில் பசிக்காக அழும் குழந்தையை எடுத்து... மதியை எழுப்பி அவளிடம் கொடுத்துப் பசியாற்றச் சொல்லி விட்டு நாற்காலியில் அமர்ந்தாள்.



இன்று... குழந்தையைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து... கன்னம் சிவந்து... சந்தோஷத்தில் இருப்பவளிடம் ஏதும் சொல்லி வேதனைப்படுத்த விரும்பவில்லை.

இரண்டே நாட்களில் மதியழகி எழுந்து நடமாடத் துவங்கி விட்டாள். மறுதினம் அவர்களும் டிஸ்சார்ஜ் ஆகலாம் என்று சொல்லி விட்டனர்.

தனக்காக அன்பு காட்டும் சித்தியை ரொம்பவும் காயப்படுத்தக் கூடாது என்று எண்ணிய மதி...

உடல் தேறி... அவள் திரும்பவும் அலுவலகம் செல்லும் வரை வளர்மதியின் வீட்டில் இருக்க ஒப்புக் கொண்டாள்.

"சித்தி! குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம்? சொல்லுங்க..."

"ம்... இக்குழந்தை தான் தொலைந்து போன உன் சந்தோஷத்தை மீட்டுத் தரணும். பழையபடி... உன்னைச் சந்தோஷமாக நான் பார்க்கணும். குழந்தைக்கு சந்தோஷி என்று பெயர் வையேன்..."

"சந்தோஷி... சந்தோஷி...! ம்... பெயர் ரொம்ப நன்றாக இருக்கிறது சித்தி... இதையே வைத்து விடலாம். சித்தி! இந்த ஞாயிற்றுக்கிழமை அண்ணன்... அண்ணியை அழைத்துக் கொண்டு வருவதாக ஃபோன் செய்து கூறினார்."

"தாராளமாக வரட்டும் மதி! நான் உனக்கு ராத்திரிக்கு ஏதாவது டிஃபன் செய்யப் போகிறேன். நீ குழந்தையுடன் இரு..."

சமையலறையை நோக்கிப் போனவளை மதியின் குரல் நிறுத்தியது.

"இவளைப் பார்த்தீர்களா சித்தி... அப்படியே அவர் ஜாடை. அவரைப் போலவே உயரம், மூக்கு..."

"என்ன இருந்து என்ன...? இக்குழந்தைக்கு அப்பனின் அன்பு கிடைக்கவில்லையே...!"

கண்களைச் சுருக்கிக் கொண்டு மதி வளர்மதியைப் பார்த்தாள்.

"ஏன் சித்தி... இவள் பிறந்த விஷயத்தை அவரிடம் சொன்னீர்களா?"

"ம்... ஆனால் அங்கே சூழ்நிலை நீ நினைக்கிற மாதிரியில்லை... மதி!"

மதி முகம் மாறினாள். "ஏன் என்னவாயிற்று?"

மனதிலே உறுத்திக் கொண்டே இருந்தது... நினைவில் வந்ததும்... உள்ளே இருந்து அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்தாள் வளர்மதி.

## 31

"இது என்ன மதி?"

"இது... இது... எங்கே கிடைத்தது உங்களுக்கு?"

"உன் ஹாஸ்டல் அறையில் இருந்து தான். கடிதம் முத்தையனிடமிருந்து வந்திருக்கிறது. ஏன் பிரிக்கக் கூட இல்லை மதி...?"



"ம்ப்ச்! அம்மா பேச்சைக் கேட்டுக் கொண்டு ஆடுகிறவர்... நான் வெளியேறி இத்தனை நாட்களாகியும் திரும்பிக் கூடப் பார்க்காதவர்... என்ன எழுதியிருக்கப் போகிறார்! எனக்கு அதைப் பிரித்துப் படிக்க வேண்டும் என்ற ஆர்வமும் இல்லை. அதன் மூலம் இல்லாத வருத்தத்தை ஏன் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்று இருந்து விட்டேன்..."

"அதெல்லாம் தப்பு. இரண்டு நாட்கள் முன்பு முத்தையனை ஃபோனில் கூப்பிட்டுக் குழந்தை பிறந்த செய்தியைக் கூறும்போதுதான் சொன்னான். அன்றுதான் சாரதா அக்கா இறந்துவிட்டார்கள்... என்று. தெரியுமா?"

தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பார்களே... அது போல வளர்மதியின் உடல் அழுகையில் குலுங்கியது.

சட்டெனக் குழந்தையைக் கீழே விட்டு விட்டு எழுந்து விட்டாள் மதி.

"சித்தி! எப்பேர்ப்பட்ட விஷயத்தை இவ்வளவு லேட்டாகச் சொல்கிறீர்களே.... என்ன இருந்தாலும் அவர் என் மாமியார் இல்லையா! நான் போயிருக்க வேண்டாமா?"

"நீ அன்றைக்குத்தன் குழந்தை பெற்றெடுத்து... மயக்கத்தில் இருந்தாய் மதி. அதிர்ச்சியான எதையும் சொல்ல வேண்டாம் என்று மருத்துவர்கள் கூறி விட்டனர்... அங்கே என்ன நிலைமை என்றும் தெரியவில்லை.

"நீ பச்சை உடம்போடு அங்கே போய் நிலைமை விபரீதமாகி உன் மனது வருத்தப்படும்படி... ஆகிவிடுமோ

என்று பயந்தேன். ஆனால்... மதி! முத்தையன் ஏன் உன்னைத் துரோகி என்று கூற வேண்டும்? நீ என்ன துரோகம் செய்து விட்டா... தலைமறைவாக இங்கு வந்தாய்?

"அப்படியா சொன்னார்... 'என்னால் தான்மா எல்லாம்! மதியை ஒன்றும் சொல்லாதே...' என்று அம்மாவை அதட்டி என்னைக் காப்பாற்றியிருக்கலாமே என்பதுதானே என் வருத்தமெல்லாம்... சித்தி!"

நிமிர்ந்தாள் வளர்மதி.

"முத்தையன் உனக்கு அனுப்பியிருந்த லெட்டரை முதலில் படி. மதி... எனக்கென்னவோ அதில் ஏதோ இருக்கிறதென்று தோன்றுகிறது...."

கடிதத்தைப் பிரித்தாள் மதி.

"அன்புள்ள மதி...

உன் அத்தை எழுதிக் கொண்டது. நான் நலம்... நீ நலமா... என்று எழுதுவதில் எந்த அர்த்தமும் இல்லை என்று எனக்கே புரிகிறது.

ஏனெனில் நானும் இங்கே நலமில்லை. நீயும் நிறை மாதமாய்... வீடின்றி... வாசலின்றி... விடுதியில் எப்படி நலமாய் இருப்பாய் என்று எதிர்பார்க்க முடியும்?

உனக்குத் தெரியுமா என்று தெரியவில்லை... வனிதாவுக்குத் திருமணமாகி விட்டது.

உன் மேல் உள்ள கோபத்தில்... உன்னை அழைக்க வில்லையே... என்று எண்ணுவாய். ஆனால்... சோகம் என்னவென்றால் நானே திருமணம் செய்து வைக்க வில்லை. நீ யூகிப்பது சரிதான்!



நானும் அவள் அண்ணனும் குத்துக்கல் போல் உயிரோடுதான் இருக்கிறோம் என்பதையே நினையாமல் வனிதா... தானாகவே துணையைத் தேடிக் கொண்டு விட்டாள்.

பிள்ளைகளை மலை போல் நம்பி... அவர்கள்தாம் வயதான நம் வாழ்க்கைக்கு வெளிச்சம் என்று நினைத்து வளர்க்கும் பெற்றோரை... சட்டென அந்த வெளிச்சத்தைப் பிடுங்கிக் கொண்டு இருட்டில் பிள்ளைகள் தள்ளுவது... எதிரிக்குக் கூட வரக் கூடாத கொடுமை.

கூடவே இருந்து... முத்தையன் இருக்குமிடம் தெரிந்து... அவன் உயிரோடு இருப்பதும் தெரிந்து... அதை மறைத்து அப்பாவி போல் ஏமாற்றி விட்டாயே... என்று எவ்வளவு உன் மேல் கோபப்பட்டேன்...

இப்படிப்பட்ட ஏமாற்றங்கள்... இதுவரை இப்படி இவள் என்னவெல்லாம் ஏமாற்றினாளோ! இன்னமும் என்னவெல்லாம் செய்யத் தயங்க மாட்டாள் என்ற அவ நம்பிக்கையை ஏற்படுத்துவது இயல்புதானே... அந்த இயல்பிற்கு உட்பட்ட மனுஷிதானே நான்...!

ஆனால் என் ஆத்திரம் என் அறிவை மறைத்து... உன்னை வீட்டை விட்டுப் போகச் செய்து விட்டது... என்னை ரொம்பவே வருத்தியது, மதி!

எருதின் புண்ணைக் குத்திக் குத்தி... வலி உண்டாக்கும் காக்கையைப் போல... உன் வேதனையை அறியாது... ஏமாற்றத்தை... கோபத்தை வார்த்தைகளாகக் கொட்டி விட்டேன்!

இப்போது காலம் பார் கேள்வி கேட்கிறது... என்னிடம் மூடி மறைத்தாய் என்று உன்னைக் கோபப்பட்டேனே! என் பெண்... என் ரத்தம்... ஒரே வீட்டில் இருந்து கொண்டே காதலை வளர்த்துக் கொண்டு காதலித்து... ஒரே நாளில் லெட்டர் மூலம் தெரியப்படுத்தி விட்டு... வேறு மதத்தினனைத் திருமணம் செய்து கொண்டு விட்டாள்.

வாழ்த்துவதைத் தவிர இந்த விதவைக்கு வேறு வழியில்லை.

ஒரே பெண்ணைச் சபிக்கவா முடியும்? 'நீ உருப்படாமல் போவாய்... என்னை மாதிரியே வருத்தப் படுவாய்...' என்று சபிக்கவா... பெற்று இவ்வளவு வருடங்கள் வளர்த்தேன்!

எங்கள் வீட்டின் நன்மைக்காக... உன் புருஷன் பேச்சை மீறக் கூடாது என்பதற்காக... நீ மறைத்தது உன்னளவில் நியாயம்... என்று இப்போது புரிகிறது மதி! ரொம்பவும் போரடிக்கிறேனோ... இந்தக் கிழவி!

என்ன செய்ய? சாவதற்குள்... இந்த நெஞ்சில் உள்ள பாரத்தையெல்லாம் இறக்கிவிடத் தவிக்கிறேன்.

முத்தையன் தான் இருக்கிறானே... அப்படியிருக்க உன்னைத் தொந்தரவு செய்கிறேனே... என்று எண்ணாதே மதி!

முத்தையனின் பிஸினஸ் நன்கு ஏறுமுகமாக இருந்தாலும் நீ வீட்டை விட்டுப் போய் விட்டாயே என்பதே- அவன் மனதைக் கரையானைப் போல் அரிப்பதைப் போல் இருக்கிறது.



யாரிடமும் எந்தப் பேச்சு வார்த்தையும் இல்லாமல்... சன்னியாசி போல்... அவன் வளைய வருவது... பெற்றவள் என் மனதைப் பிசைகிறது, மதி!"

படித்துக் கொண்டே இருந்த மதிக்குத் தலை சுற்றியது.

கணவனிடமிருந்து... கடிதம் வந்திருக்கும் என்று நினைத்துப் பிரித்தால்... மாமியார் எழுதியிருக்கிறார் என்று தெரிந்ததுமே... திடுக்கிட்டாள்.

ஏராளமான எழுத்துப் பிழையுடன்... கோணல் வரிகளில் இருந்தாலும் மாமியாரே நேரில் சொல்வது போல் இருந்தது, அக்கடிதம்.

தான் இல்லாமல்... கணவர் வருத்தப்பட்டிருக்கிறார் என்பதைப் படிக்கையிலேயே கண்களில் நீர் கோத்துக் கொண்டது. அவ்வளவு அன்பு இருப்பவராக இருந்தால்... அன்று அம்மாவிடம் தனக்காகப் பரிந்து பேசியிருக்க வேண்டியதுதானே!

கண்ணீரைச் சுண்டி விட்டு விட்டுப் படிப்பதைத் தொடர்ந்தாள்.

அவளுடைய கேள்விக்கான விடை அக்கடிதத்திலேயே தொடர்ந்தது.

"இப்படி வருத்தப்படுவதை விட... அவளைப் போய்ப் பாரேன்... எடுத்துச் சொல்... புரிந்து கொள்வாள். நம் வீட்டு வாரிசைச் சுமந்து கொண்டிருக்கிறாள். இப்போது போய் வருத்தப்பட விடாதே என்று நான் எவ்வளவோ கூறியதும்தான் உன்னைப் பார்க்க வந்தான்.

'இப்படி... கோழைத்தனமா ஒரு புருஷனுடன் வாழ்வதை விட... தனியாக இருந்து விடலாம்' என்று உன் தோழியிடம் நீ கூறிக் கொண்டிருந்ததைக் கேட்டானாம்.

'நல்ல வேளையாக நான் போனதை மதி பார்க்க வில்லை. அப்படி விருப்பமில்லாதவளை வற்புறுத்திக் கூப்பிட மனமும் இடங்கொடுக்கவில்லை. தன்மானத்தை விட்டுக் கெஞ்சி விடலாம் அம்மா... அவள் ஃபிரண்ட் முன்னாடி... எனக்குக் கூட பரவாயில்லை. அவளுக்கு அது அவமானமாகப் போய் விடப் போகிறதே... என்று திரும்பி வந்து விட்டேன்!' என்று சொன்னான்..."

ஐயோ! கடவுளே... அன்று ஆனந்தியிடம் மனம் விட்டுப் பேசுகிறேன் பேர்வழியென வருத்தப்பட்டுக் கூறிக் கொண்டிருந்ததைப் பாதியில் கேட்டுவிட்டு வருத்தப்பட்டுப் போய் விட்டாரே! அது தெரியாமல்... நானும் அல்லவா... தப்பாக நினைத்து வருத்தப்பட்டு...

"சரி... மதி! போனதெல்லாம் போகட்டும். எனக்கு உன்னைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது. இங்கு நம் வீட்டில் உனக்குத் தலைப் பிரசவம் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். நீ உடனே விடுதியை விட்டுக் கிளம்பி வா. விடுதியைக் காலி செய்து கொண்டு... வளர்மதியையும் அழைத்துக் கொண்டு வா.

உன் மேலுள்ள கோபமெல்லாம் போனதும்... உனக்கு இதுவரை ஆதரவாக இருந்த வளர்மதியையும்... நேரில் பார்த்து நன்றி சொல்ல வேண்டும் என்று இருக்கிறது.

இவ்வளவு பெரிய கடிதம் எழுதியிருக்கிறாளே... ஏன் நேரில் வரக்கூடாதா? என்னைப் பார்த்து இரண்டு வார்த்தை



நேரில் பேசிக் கூப்பிடக் கூட மனமில்லையா... என்று எண்ணுகிறாயோ?

இதுவரை... இத்தனை பெரிய கடிதத்தை எழுதிய நான் மிகப் பெரிய ஒரு விஷயத்தை மறைத்து விட்டேன்... மதி! அந்த வருத்தமான செய்தியை... கடிதத்தை முடிக்கும்போது சொல்லிக் கொள்ளலாமே... என்றுதான்!

ஆமாம்... மதி! கடவுள் எனக்குத் தேதி குறித்து விட்டார். தொண்டையில் புற்றுநோய் வந்து... பேசவும் முடியாமல்... முழுங்கவும் முடியாமல் அவஸ்தைப் படுகிறேன்... எவ்வளவு நாட்கள் உயிரோடு இருப்பேனோ... தெரியவில்லை. வாழும் நாட்களை போனஸ் என்று நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

மதி... நீ... நான் மேலே போவதற்குள்ளேயாவது என்னைப் பார்க்க வருவாயா... மதி?

பார்க்கலாம்... உன் குழந்தையை... இல்லை இல்லை... என் பேரப்பிள்ளையைத் தூக்கும் அதிர்ஷ்டத்தை நான் செய்திருக்கிறேனா... என்று தெரியவில்லை.

உன் வரவை ஆவலோடு
எதிர்பார்த்துக் கொண்டு,
உன் அத்தை."

கையில் கடிதத்தை வைத்துக் கொண்டு... தேம்பி அழும் மதியைப் புரியாது பார்த்தாள் வளர்மதி.

'முத்தையன் அப்படி என்ன எழுதியிருக்கிறானோ... தெரியவில்லையே! ஒருவேளை... உன்னுடன் வாழவே விருப்பமில்லை என்று கூறியிருக்கிறானோ? அதனால்தான்

இந்தப் பெண் இப்படி அழுகிறாளோ...?' - யோசனையுடன் மதியின் தோளைத் தொட்டாள்.

அவளிடம் ஏதும் கூறாது... கடிதத்தை அவள் கரங்களில் திணித்தாள் மதி.

படித்ததும்... எல்லாம் புரிந்தது வளர்மதிக்கு. அவள் மன வருத்தத்தையும் உணர முடிந்தது.

"இப்படி... நானும் எதிர்பார்க்கவில்லையே... மதி! அதனால்தான் இக்கடிதம் பார்த்தும்கூட... நீ வரவில்லை... வந்து அம்மாவைப் பார்க்கவில்லை என்பதால்தான்... உன்னை அன்று துரோகி என்று சொன்னானோ... முத்தையன்!

பேரப் பிள்ளையைக் கொஞ்ச வேண்டும் என்று கடைசி ஆசையை எழுதியிருக்கிறாரே... சாரதா அக்கா. அவர் இறப்பதற்கு முன்பே உன் பெண் பிறந்து விட்டாள் என்றாலும்... தெரியப்படுத்தக் கூடச் செய்யாமல் விட்டு விட்டோமே... மதி!"

வருத்தமாய் வந்தன வார்த்தைகள்!

"நான் இப்போதே ஃபோன் செய்து முத்தையனிடம் இக்கடிதத்தையே நீ இப்போதுதான் பார்த்தாய்... என்று எடுத்துச் சொல்கிறேன்! அன்று ஏதோ வருத்தத்தில் சொல்லி விட்டான். இப்போது கண்டிப்பாகப் புரிந்து கொள்வான்."

ஆறுதலாகப் பேசிய வளர்மதியைக் கையமர்த்தினாள் மதியழகி.

தூங்கும் குழந்தையைத் தட்டியவாறே... "இல்லை சித்தி! இனிமேலும் தாமதிக்க வேண்டாம். எனக்குத் தவறு



செய்து விட்டோமோ... என்ற குற்ற உணர்வாக இருக்கிறது. நான் செய்த தவறை நானே சரி செய்கிறேன். இல்லையில்லை... சரி செய்ய முடியாத தவறு இது... வருத்தப்பட்டு... இறந்த அத்தைக்கு என்னால்...

ஆனால் அதற்குப் பிராயச்சித்தம் செய்யப் போகிறேன். யோசித்துப் பார்த்தால் தனியாகப் பிரிந்து வாழும் அளவிற்கு எங்களிடையே இது பெரிய கருத்து வேறுபாடு இல்லை. நானே அவரிடம் பேசுகிறேன்... மன்னிப்பும் கேட்கிறேன்...

இந்த முடிவு எடுத்த பின்தான் கடந்த ஏழெட்டு மாதங்களாக இருந்த மனச் சுமை குறைந்தது போலிருக்கிறது, சித்தி...!"

"இப்போதே ஃபோன் செய் மதி... ஆறப் போடாதே!"

"இல்லை சித்தி! நான் நேரிலேயே போய் அவரைப் பார்க்கிறேன். அவரோடு ஆயுள் முழுக்க வாழப் போகிறேன். அத்தைதான் என்னை மன்னித்து விட்டார்களே... அப்புறம் என்ன...

அவர்கள் பேத்தியை... தொட்டுத் தூக்காவிட்டாலும்... பேத்தி அவர்கள் வீட்டிலேயே வளர்ந்தால்தான்... அத்தையின் ஆத்மா சாந்தியடையும் சித்தி!"

அடுத்த அரை மணி நேரத்தில்... ரெடியாகிக் குழந்தையுடன் கிளம்பினாள்... "நான் கிளம்பறேன், சித்தி! வாங்க போகலாம்..."

"ஆனால் உன்னை இப்படிப் போக விட்டால்தானே!"

திடுக்கிட்டாள் மதி.

'என்ன இது! வெண்ணெய் திரண்டு வரும் சமயம் தாழியை உடைத்த கதையாய்... தான் மனம் மாறிச் செல்லும் சமயம் சித்தி இப்படிச் சொல்கிறாரே...?' - வெளிறிப் போன அவள் முகத்தை நிமிர்த்தினார் வளர்மதி.

"உன்னை இப்படியே வந்த மாதிரியே போக விட மாட்டேன் என்றேன். நீ வரும்போது எப்படி வந்திருந்தாலும் சரி... இப்போது உன்னையும் உன் பெண்ணையும் முத்தையன் வந்து அழைத்துப் போவதுதான் சரி... அது தான் முறையும்கூட... இரு. அவனுக்கு ஃபோன் செய் கிறேன்..."

சொன்ன கையோடு தொலைபேசியை எடுத்து...

"முத்தையா! உன் பெண்டாட்டியையும் உன் குழந்தையையும்..." என்று ஆரம்பித்து வளர்மதி சொல்லிக் கொண்டே போக...

மதியின் வெண்முகம்... மேலும் சிவந்து குங்கும நிறமானது.

அம்மாவின் சந்தோஷத்தைப் பார்த்து... என்ன புரிந்ததோ தெரியவில்லை... குழந்தையும் தூங்கிக் கொண்டே சிரித்தது.